Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்காடு

கவிதை நூல்

ஆசிரியர்

திரு ப. தியான்

எனை ஈன்றவர்க்கும்
என் மண் காத்தவர்க்கும்
இந்நூல் காணிக்கை

நாடகத்தென்றல் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர்:	சொற்காடு
நூலின் விடயம்:	கவிதை நூல்
நூலாசிரியர்:	ப.தியான்
அட்டைப்படம்/ நூல்வடிவமைப்பு:	செல்வன் கீர்த்திகன் தியான்
தட்டச்சு உதவி:	செல்வி கீர்த்தனா தியான்
செயற்திட்ட உதவி:	திருமதி வசந்தரூபி ஞானகுருவேல் திருமதி கல்யாணி இராஜ்குமார் செல்வி கீர்த்தனா தியான் செல்வன் கீர்த்திகன் தியான்
வெளியிட்டத்தேதி:	27.10.2018 (முதற்பதிப்பு)
வெளியீட்டு உரிமை:	ப.தியான் / நாடகத்தென்றல்

Book Title: **Sotkaadu**
Author: **P. Thiyan**
Content: **Collection of poems written by P. Thiyan**
Published by Nadahathenral on 27th of October 2018

Copyright © 2018 by P. Thiyan and Nadahathenral
All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுரை

விளைவுக்கும் விளைச்சலுக்கும் காடு கருவாகிறது. செடிகளுக்கும் கொடிகளுக்கும் அங்கே தங்குதல் தடையில்லை. கதிரவக் கணைக் கொட்ட கார்மேக மழை ஒப்ப தத்தம் விருப்பங்களில் காடுகள் பச்சயம் தொகுத்து பசுமை கொண்டாடுவது அழகெனின் நெறிகளை நிரல்களை வரையறைகளை அவை சூடாதிருந்து வேர்களை விருப்பத்திற்கு விரவி விட்டிருப்பது காட்டுக்கான இலக்கு.

என் சொற்காட்டில் எழுத்துக் கோர்வைகள் சொற்குவியல்கள் என் இச்சைப்படி கொட்டிக்கிடக்கிறது. தமிழன்னையவள் தலைகோதி தன் மடி தந்த மயக்கத்தில் என் செதுக்கல்களில் சிதைவுகள் ஏற்பட்டிருக்கலாம். அதனால் நெறிகளை அவை தறித்திருந்தால் விதிகளின் வேர்களை வெறுத்திருந்தால் அது அன்னையின் வளர்ப்பில் அல்ல என் வார்ப்பில் தவறு என்பேன்.

பேரன்பிற்கினிய வாசிப்பாளர்களே உங்கள் கரங்களில் அடைக்கலமாய் அடங்கியிருக்கும் இந்த சொற்காட்டின் உள்ளே ஏகாந்தமாய் நீங்கள் உலவலாம். என் எண்ணங்களின் மொழிகளை இங்கே விதைத்திருக்கின்றேன். காலையை அலங்கரித்து விடியல்களை தொகுத்து எங்கள் நடைமுறைகளை நகர்த்தும் இயலின் தொடுகைகளை இயலாள் தாலாட்டாய் தந்திருக்கின்றேன்.

மனங்களின் மகுடியில் ஆடும் எண்ணங்களின் இருப்புகளில் கீறல்களையும் கோரல்களையும் மன தின் தின்னா என்ற சந்தம் புதைத்து விதைத்திருக்கின்றேன். காதல் என்ற மருத்துவம் பொய்க்கினும் மெய்க்கினும் காதல்மொழிதல் மனதின் மகுடம். அது ஆளும் அழகு, வலியில் பெருக்கும் நெகிழ்வு, நினைவின் தாலாட்டு அதை அழுத்தம் குறைத்து வீரியம் குறைத்து மெலிதாய் தொட்டுச் செல்ல இந்தச் சொற்காட்டுக்குள் தூவியிருக்கின்றேன்.

மனிதம் புலன் கெட்டுப் புலம்பும் பொழுதுகள் அதிகம். ஆற்றாமை தூக்கி அறியாமை புகுந்து பொறுமை கெட்டு பொறாமை உற்று வாய்மை வரும் சுயமொழி ஆடலை பொதுப்புலம்பலாய் இந்தச் சொற்காட்டுள் அலைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டிருக்கின்றேன். சிலேடைகள் தமிழின் சிறப்புகளில் ஒன்று அதை வேர்ப்பதிக்க முனைந்து ஆங்காங்கே ஒரு சிலவாய் நட்டு வைத்திருக்கின்றேன். அகலங்களை ஆழங்களை நீளங்களை நீங்கள் நிர்ணயித்து நடக்க இந்தச் சொற்காடு உங்களோடு கையிணைத்து நடப்பதை எண்ணி மகிழ்கிறேன்.

இந்தச் சொற்காட்டில் மூலிகை பறித்தும் ஊஞ்சல் கட்டி ஆடிப்பார்த்தும் தகமை உளதாய் தன் உள்ளத்தின் அளவுகோலின் அகப்புறத் தொடுகையில் அணிந்துரை கட்டி இந்த சொற்காட்டிற்குள் புகல் நன்றென அணி செய்து தந்த திருமதி சுஜி இரமேஸ் அவர்கள் மலையகம் தந்தளித்த கவிஞை இன்று நெதர்லாந்திலிருந்து கவிப்படையலிடும் ஆளுமைமிக்க பெண். அவருக்கு என் நிறைவான வாழ்த்துகளுடன் நன்றியையும் தெரிவிக்கின்றேன்.

காட்டை சோலையாக உருமாற்றியிருக்கிறார் என் நண்பர் திரு இரமணன் அவர்கள். வாழ்த்துரை தருகிறேன் என்றார் நான் முற்றாக மறுத்து என் சொற்காட்டினுள் கைகோர்த்து நடந்து வாருங்கள் முற்களை முரண்களை பட்ட மரங்களின் பசும் போர்ப்புகளை கட்டித்தாருங்கள் அதை ஆய்ந்துரையுங்கள் என்றேன் என் அன்புக் கட்டளைக்கு அந்தக் கலைவளரி காட்டின் உள்ளீட்டை சோலையாக்கி ஆய்ந்துரைத்திருக்கிறார். வரிகளை நெறி பிரித்து வரம்புகட்டி தேக்கங்களை தெளிவுபடுத்தி மடை திறந்திருக்கிறார். அவருக்கும் என் நன்றிகள்.

தாய்த்தமிழ் நாட்டில் இருந்து இசைக்கவி திரு இரமணன் அவர்கள் நான் முகமறியாப் பெரியவர். இந்தச் சொற்காட்டின் தளிர்களை வருடி வேர்களில் நீர் பொசித்து என் தடத்தை ஆழமாக்கியிருக்கிறார். பெயருக்கு ஒரு வாழ்த்தை வழங்கும் நோக்கில்லாது அறம் காத்த தமிழ் கொண்டு யாத்திருக்கிறார். அவருக்கும் என் நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். அவரின் வாழ்த்துரைக்கு வழிதேடித் தந்து இந்தச் சொற்காட்டு கவிதை நூலை சிறப்பாக்கிய திரு ஹ. ஹிமேஷ் அவர்களுக்கும் எனது சிறப்பான நன்றிகள். நேரத்தின் வலுவை இழுக்கமுடியாது அல்லல் பட்டோடும் எம்மில் திருமதி வசந்தரூபி ஞானகுருவேல் அவர்கள் திருமதி கல்யாணி இராஜ்குமார் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துப்பிழைகள் பார்த்து திருத்தம் செய்து தந்தமைக்கு இருவருக்கும் நன்றிகளை இங்கே தெரிவிப்பதில் மகிழ்கிறேன்.

இளம் வயதில் நூல் வெளியீட்டிற்கு முனைப்புக் கொண்டும் முயற்சியின்றி ஓடிய என் கீறல்களின் வரிகளை நீர்த்துப் போகவிடாது நூலுருவாக்கிய என் அன்புச் செல்வங்களின் உழைப்பை எந்த வரிகளிலும் செதுக்கிவிட முடியாது. என் மகள் கீர்த்தனாவின் சொற்காடு என்ற பெயர் சூட்டல் என்னைப் பரவசப்படுத்தியது. என் கவிதைகளை முதல் ஆளாக கேட்டு இரசித்துச் சொல்லும் அவளே என் முதல் வாசகி. என் செல்ல மகன் தன் கற்கையின் சிரமத்திலும் கவிதைகளை வாசித்து அதற்கான படங்களைக் கோர்த்தும் நூலின் வடிவத்தையும் அட்டைப்படத்தையும் அழகுருச் செய்த அவரது உழைப்பின் தன்மை இந்தச் சொற்காட்டின் உள் செல்லும் உங்களுக்குப் புரியும் அதிகம் பேசாதவராய் பேசினால் பெறுமதியாகப் பேசும் என் துணையாள் திருமதி சுமதி தியான் இந்த சொற்காட்டின் அச்சாணியாகி நகர்த்தியமை என் மனம் நெகிழும் சிறப்பு.

இந்தச் சொற்காட்டில் கொட்டிக்கிடக்கும் சொற்கள் குமுக வலைகளின் தளங்கள் தொட்டவை. பல நண்பர்கள் இலகுதமிழில் அல்லது எளிய நடையை கையாளுங்கள் என்று அன்பால் கடிந்தும் கவிதைக்களத்தின் காத்திரம் என்னை கட்டிப்போட்ட நிலையில் சொற்பதங்களின் சூழ்ச்சிகள் மிகைகொண்டதாக கூறுகின்றார்கள். நீங்கள் நலிவை காட்டுங்கள் நாளை திருத்தப்படும்.

நன்றியுடன்

ப. தியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கைக் கவிஞனின் இதயத்துக்குள்....



ஒரு கவிதையைக் காட்டிலும் அது வெளிப்பட்ட கவிஞனின் மனவெளி இன்னும் சுவாரசியமானது. சொல்ல முயன்று தோற்பதே கவிதை என்பதை ஒவ்வொரு நல்ல கவிதையும் நிரூபித்துக்கொண்டே இருக்கிறது!

இந்த இனிய உண்மையைத்தான் ஜெர்மனியில் வாழும் செந்தமிழ்க் கவிஞர் ப. தியான் அவர்களுடைய கவிதைகள் எனக்கு மீண்டும் சொல்கின்றன.

இயற்கை எழில் கொஞ்சும் நகரில் இருக்கிறார். அவர், வாழ்க்கைக்குத் தொடர்பான அத்தனை சேதிகளையும் இயற்கையினிடமிருந்தே பெறுவதில் அதிசயம் என்ன இருக்க முடியும்! அதிகாலையில் வெறுங்காலுடன் ஒரு புல்வெளியில் நடக்கிறார் கவிஞர். பாதத்தில் படுகின்ற பனித்துளிகள் அவருடைய உயிரையே குளிர்விக்கின்றன. அவற்றை எப்படிச் சிறப்பாகச் சொல்கிறார் தெரியுமா?

முத்துக்கள் நீருக்குள் மட்டும்
என்பதை பனிமுத்துக்கள்
பகிரங்கமாக மறுத்து..

என்கிறார்!

கதிரவன் எப்படி வரவேண்டுமாம்? இந்தக் காலையை இன்பமாக்க வேண்டுமாம்.

காலை இனிக்க வா
கருத்தைப் பதியத்தா
மீளாது உழலும் வாழ்வை
இனிக்கத் தா!

என்று, வெறும் வாழ்வு தருவதுமல்ல உன் வேலை, நல்வாழ்வை, இனிமையான வாழ்வைத் தர வேண்டும் என்று கதிரவனுக்குக் கவி கட்டளை இடுகிறார் பாருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர் கவிமாமணி திரு இலந்தை இராமசாமி அவர்கள், இயற்கையை ரசிக்காமல் இழுத்துப் போத்திக்கொண்டு தூங்கும் நம்மைப் பார்த்து, *"காலைக் கவிதையைக் காக்கை ரசிக்கிறது"* என்று ஊசிகுத்துவது போல் சொல்வார்! எதற்கும் நேரமில்லாமல், எதையும் சாதிக்காமல் எங்கோ ஓடிக்கொண்டே இருக்கும் நம்மைப் பார்த்துப் ப. தியான் சொல்கிறார்:

காலையை மட்டுமல்ல
கதிரவனையும் கடந்து
மனிதனையும் மறைத்துக்கொண்டு
அவசரங்களை
அள்ளி வைத்திருக்கிறோம்!
என்ன செய்வது?
இந்த நாளும்
இப்படித்தான் கடக்கிறது...

ஆசைகளுக்கும் தேவைகளுக்கும் வேறுபாடு புரியாமல் அவலங்களில் நாம் உழல்கிறோம். நம்முடைய பிரச்சினை போதாமை அல்ல, நிறைவின்மை. கவிஞரின் தத்துவப் பார்வை இதைச் சுருக்கென்று சொல்ல வைக்கிறது:

அதிகமானால் எல்லாமே
அறன் கெடும்...

ஆம்! ஆசையால் கெடுவது நம்முடைய அறத்தன்மை என்பதைப் பதியன் நம் நெஞ்சில் பதியவைக்கிறார். அதற்கு நேசமும் விதிவிலக்கில்லை. நாம் நேசிப்பவர்கள் மீது நாம் நேசம் காட்டுவதற்குப் பதிலாக, ஆசை வைத்தோமானால் அதுவும் நம்மைத் துன்பத்தில்தான் கொண்டு சேர்க்கிறது:

நேசங்கள் கூட
மோசங்கள் செய்துவிடும்
அதிகமானால்...
என்று எச்சரிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் உறக்கத்தை அதிகம் விரும்புகிறான். அது ஆசைகளை அதிகமாக விரும்புவதால் வரும் அயர்வின் விளைவு. பார்வையில் ஒளிகுன்றிப் போகும் மனிதனைப் பார்த்துப் ப. தியான் பாடுகிறார்,

இனி
தீக்குச்சிகளைப் புருவத்தில்
மறைத்துக்கொள்ள வேண்டும்!

அப்போதுதான் பார்வையில் ஜுவாலை வரும் போலும்!

உடம்பாகத்தான் நாம் இருக்கிறோம்; எனவே மனம் நமக்குப் புரியவில்லை. மனமாகத்தான் இருக்கிறோம் நாம். எனவே உடம்பை அதன் இடத்தில் வைக்கத் தெரியவில்லை நமக்கு. உடம்பும் மனமுமாகத்தான் நாமிருக்கின்றோம். அதனால்தான் மனது புலம்ப, உடம்பால் அவதிக்குள்ளாகிறோம். நினைப்புதான் மனிதன். அதுதான் எல்லா இன்ப துன்பங்களுக்கும் காரணமாகிறது. நம்முடைய நினைப்புகள் நம்மிலேயே எங்கோ அம்புகளாகச் செருகி நம்மைத் துன்புறுத்துகின்றன.

நினைவுகள் செருகியிருக்கும் இடமெது
காட்டிக் கொடுங்கள்
கிள்ளிக் களைவோம்
என்று பாடுகிறார்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, "என்பார் கவிஞர் புலமைப் பித்தன். ஆம், நாம் எல்லோரும் கண்ணதாசன் சொல்வதுபோல், "கள்ளமற்ற வெள்ளைமொழி தேவன் தந்த தெய்வ மொழி" பேசிக்கொண்டிருந்த குழந்தைகளாகத்தான் இருந்தோம். மாசுபட்டோம். அதை அறிவென்று கருதி மலினப்பட்டோம். அதுபுரிந்தபோது நம் உண்மை முகத்தைக் காணத் தலைப்பட்டோம். கண்ணாடியில் நம் முகம், அந்த உண்மை முகம் காணப்படவில்லை. அது கண்ணாடியில் ரசம் போனதால் என்று நாம் அப்போதும் இன்னொன்றைக் குறை கூறுகிறோம். இல்லை அதற்கு வேறு காரணம் இருக்கிறது என்று அருமையாகச் சுட்டிக் காட்டுகிறார் கவிஞர்:

புதைவுகளில்
மறைந்தும் மறந்தும் போன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடி முகம்
முகப்பூச்சில் சிதைந்திருக்கலாம்...

ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய வரிகள். என்னதான் புலம்பெயர்ந்து வந்த இடத்தில் சுகமாக வாழ்ந்தாலும், தாய்மண்ணின் நினைப்பு வரும்போது உயிரே கண்ணீராகப் பெருகாதோ! அமைதியான சூழலிலும், அந்த அவல ராகங்கள்தானே நெஞ்சைக் கிழிக்கின்றன!

பழஞ்சோற்றுச் சாறும்
பச்சை மிளகாயுடன்
வெங்காயக் கூட்டும்
வரம்போரக் காற்றும்
வந்தணையும் அயல்தோட்டத் தோழமையும்
வெள்ளி போல்
வெளுத்த காலையை
அள்ளிப் பருகிட
அந்த நாள் வருமா?
அகம் நிறைக்க
சொந்த மண் விளிக்குமா!

கவிஞருடைய இந்த ஏக்கம் நம் மனத்தைப் பிழிகிறது. மிக நியாயமான இந்தக் கனவு நிறைவேற வேண்டும் என்று பராசக்தியை வேண்டுவோம்,

எல்லாம் எப்படிச் சொல்ல முடியும்? உள்ளே இறங்கி உவகை பெறுங்கள்!

அன்புக் கவிஞர் ப. தியான் மேன்மேலும் தன்னுடைய கவிதை வேள்வியில் மாண்புற்று விளங்க மனதார வாழ்த்துகின்றேன்!

அன்புடன்,
இசைக்கவி ரமணன்
அக்டோபர் 4, 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

பிரபஞ்சத்தின் பெருஞ்சிறப்பே,அருஞ்சுவைக் களஞ்சியமே,
தெவிட்டாத தேனூறும் தீஞ்சுவையாம் பைந்தமிழே, தாய்மொழியே
உந்தனுக்கு என் தலை வணக்கம்.
கற்பனைக் கோர்ப்புகளால்,வார்த்தைகளின் வார்ப்புகளால்,
கருகொண்டு கவிகண்டு, சொற்காடாய் நூல் கொண்டு,
படைப்பொன்றை படையலிட்ட நற்கவிக்கு என் தமிழ் வணக்கம்.

கவிதையின் தேசத்தில் காற்றாய் தவழ்ந்து, தமிழை அளைந்து,
மொழியை விழுங்கி, உணர்வுகளைப் பிழிந்து, தங்கள்
எழுது கோல் துப்பித் தள்ளிய அத்தனை எச்சங்களும் எழுத்துக்களாகி,
எண்ணங்களில் சிறகடித்து, ஏடுகளை அலங்கரித்து
அழகிய தொகுப்பாகி வியப்பளிக்கிறது.

அறம் பாடி ,அகம்பாடி , இயற்கை தழுவி, இதயம் கழுவி
புதுமை விதைத்து படர்ந்த சொற்காட்டுக்குள்,
விந்தை தேடி நான் நுழைய, அங்கு வியந்தது பாதி, வியர்த்தது மீதி.

தலைப்புகளை விளக்குவதா! தமிழை விளக்குவதா!
பொருள் பிரித்து கருசிதையா நயம் படித்து , இலயம் கூட்டி மெருகேற்றிய
கவிச் சுவாலையில் பற்றி எரிகிறது “சொற்காடு”
புகையாகி புலம்பல்களாகி, வலியாகி வலிமைகளாகி,
தமிழோடு போராடி, தாளச் சுவையூட்டி,
சிதைக்காமல் கவிதை வதை செய்த வித்தை கண்டு
விக்கித்துப்போனேன்.

மூர்க்கத்தனமாய் உதைத்தாலும் முத்தமிடும் தாய்மைக்கு ஒப்பிட்டு
செப்பனிட்ட சுந்தர வரிகளில், உயிரான மொழியாளாகி,
உரமிட்டத் தமிழ்பற்றால் இலக்கணம் இடறாமல்
பட்டாடை உடுத்தி பளிச்சிடுகிறது தங்களின் சிங்காரத் தமிழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடியல்களை நேசிப்பதில் நிகரில்லா கதிரவனாகி
இயற்கையும் எழிலாகி பவித்திரமாய் பிரகாசிக்கிறது கவிதைகளில்.

காதலில் தோற்றவனின் வலியை அறியும் அருகதை,
கடவுளுக்கும் இல்லை என கவிஞரிட்ட சாட்டையடி சிலிர்க்க வைத்தது.
நாட்காட்டிகளாக கிழித்தெறியப்படும் பொன் மொழிகளின்
ஞாபகங்களோடு புணரமைக்கப்படட்டும் புது வாழ்வு என
பட்டைத் தீட்டப்படும் எதிர்காலம் நம்பிக்கை தருகிறது.

அடிக்கடி நிகழ்த்தப்படும் பேனையின் தீ எரிப்பாலும்,
தாள்கள் தாக்குதலுக்குள்ளாகும் ஆழமான தகனத்தாலும்,
கவிஞன் என்றொரு தீர்ப்புக்காய் காத்திருப்பவர்களுக்கு
தீக்குளித்து சவாலிட்ட "படைப்பு" எனும் கவிதை மிகச் சிறப்பு.

ஒவ்வொன்றாய் தேடி ஒட்டுமொத்தமாய் புகுந்த சொற்காட்டுக்குள்
முற்கள் குத்துமோ என விழிபிதுங்க, அங்கு சொல் குத்தி தைத்ததால்
கிழிஞ்சல்களையும் இரசித்தேன் அவை கவிக்கீறல்கள் என்பதால்.
சொற்பின்னல்களின் புலமைத்துவத்தால் புனையப்பட்ட சாமர்த்தியம் ,
கவிச் சாணக்கியனாய் தங்களை பரிணாமம் பெற வைத்துள்ளது.

சமகால படைப்பாளர்களில் தமிழுக்கு புதுத் தெம்பு கொடுத்து
இரசனையோடு சிந்திக்க வைத்து, அணுகு முறையில் ஒரு அபாரத்
திறமையோடு நூலாக்கம் பெற்ற இப்படைப்பில் என் கருத்தும்
அணிந்துரையாய் அலங்கரிப்பது அளவற்ற பெருமகிழ்வு.
படைப்பாளர்களை பட்டங்களால் கௌரவிப்பது பண்பாடு என்பது

ஏற்றுக்கொள்ளப்படுமானால்,
இச் "சொற்காடு" கவிஞனை "இலக்கண அரக்கன்" என்பேன் நான்.
ஏற்புடையதாகுமெனில் ஏற்கட்டுமே இவ்வையகம் இக் கவிஞரை.

என்றென்றும் தமிழோடு
நெதர்லாந்தின் மலையக எழுத்தாளர்
திருமதி சுஜி ரமேஷ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுரை

சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து...

“சொற்காடு” கவிதை நூலை ஆய்வு செய்யுமாறு நூலாசிரியர் என்னை வேண்டிக்கொண்டார், வேண்டிக்கொண்டார் என்பதைவிட கட்டளை இட்டார் என்றே சொல்லவேண்டும். ஒரு கவிதைநூலை ஆய்வுசெய்யும் அளவிற்கு என்னிடம் ஆற்றல் உண்டோ? என்னை நானே கேட்டுக்கொண்டேன். அத்திறமை என்னிடம் இருப்பதாக தெரியவில்லை ஆதலால் வாழ்த்துரை தருகிறேன் என்றேன். அதுவொன்றும் தேவையில்லை தங்களிடமிருந்து ஆய்வுரையையே எதிர்பார்க்கிறேன் என்றார். என்மீது அவருக்கு இருக்கும் அளப்பரிய நம்பிக்கையால் குருவி தலையில் பனம்பழமாக என் நிலை! இருப்பினும் தன் தமிழ்ப்பணியில் என்னையும் இணைத்து முத்தமிழின் மூன்றாம் தமிழான நாடகத்தமிழால் உறவாகிய அன்பு அண்ணர் தமிழாசிரியர் தியாகராசன் எனும் தியானுக்கு எனது நன்றியை இந்த வேளையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒருவரது கற்பனைத்திறனையும் அவரது படைப்பாற்றலையும் ஆய்வதென்பது அவரது சுயத்துள் புகுந்து பார்ப்பதாகவே பொருள் பட்டுவிடும் என்பது எனது பேராதங்கம். எனவே இதை எனது சிற்றறிவுக்கெட்டியவகையில் ஆழ, அகல, நுணுக்கங்களை விளக்கிப்பார்க விளைகிறேன்.

“சொற்காடு”
அது என்ன சொற்காடு?
சொற்கள் மட்டுமே கொட்டிக்கிடக்கும் காடா? அல்லது அடர்ந்த காட்டுக்குள் தனித்து விட்டால் வழித்தடம் தெரியாது தவிப்போமே அதுவா? அல்லது சொற்களை விதைத்து விவசாயம் செய்யும் காடா? கேள்விகள் துளைக்க கவிதை நூலுக்குள் நுளைந்தேன்.

சொல்+காடு=சொற்காடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடு:- மரங்கள் ஆழவேரோடி அகலக்கிளை விரித்து கூர்ப்பொடு வானுயர்ந்து நிற்பதானது... அல்லது விதை விதைத்து பயிர்வளர்க்க அனைத்து வளங்களையும் கொண்ட நிலமாய் இருப்பதானது...

சொல்:- சொல்லப்படும் சொல் ஆழ்ந்த அகன்ற நுணுக்கமானதாக நிற்பதானது... அல்லது ஏவல் வினையாகி வினையாற்றுவதாய் நிற்பதானது...

கவிதையின் இலக்கணவிதிகளை எடுத்தியம்பி வாசகர்களை சலிப்படையச் செய்யாமல் "சொற்காடு" கவிநூலில் இடம்பெற்றிருக்கும் கவிதைகளின் சொல்லாட்சி, அது சொல்லும் செய்தி, அதுகூறும் பல் பொருள், மறைபொருள் பற்றி எனது பார்வையை செலுத்துகிறேன்.

இயலாள் தாலாட்டு
மன தின் தின்னா
பொதுப் புலம்பல்

முத்தமிழ் போல் முப்பரிமாணத்தில் சொற்காட்டை வடிவமைத்து முதற்பகுதியில் இயலாள் எனும் இற்கையை இரசித்து நயம் பெற வடித்த கவிதைகள் 30. மனமது தாளமிட மடையுடைத்த கவிதைகள் மன தின் தின்னா 30. பாரில் மாந்தர் பயனுறவென்றெண்ணி அரும் பெரும் பொருள் புகுத்தி மருந்தெனும் அணியேற்றி பொதுப்புலம்பல் என்று புனைந்திட்ட கவிதைகள் 40. இம்மூன்றும் சொற்காட்டை சொர்க்கபுரியாக்கி இருப்பது கவிதைநூலை வாசிக்கும் வாசகர்களை பிரம்மிக்க வைக்கும் என்பதில் ஐயமில்லை.

புலம்பெயர் வாழ்வியலில் தன் தடம்பதித்த ஜெர்மனியின் இயல் பாடும் விதம் குளிர்நாட்டில் கதிர்தேடிக் கவிபாடி விரிகின்ற ஆரம்பக்கவிதையே கூடல் கொள்ளும் மனம் சூடலாக விரிகிறது.

"இதழ் விரித்து புன்னகை சூடி
கதிரவக்காதலில் பூப்பெய்தும் மலர்களை...
கருவண்டுகள் மயக்கிடத்தான்...
காலை கண்விழித்ததோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் ஒவ்வொன்றையும் கரம்பற்றி கவிபடிக்கும் திறனதனை "கள்ளுண்ட கள்" மூலம் புலப்படுத்தும் விதம்

கவி தைக்க, விதை கதையோ கருவோ!
தையல், தைத்த கவியில் கள் பெருக்கு
உள்ளத்துள் போ, தை என்றது
திங்கள் தீங் கள் இல்லை என்பதால்
திங்களால் தின் கள் இனிக்கிறது...

நேரடியாக ஒரு பொருள் துலங்கும் அடியெடுத்து கவிதொடுக்கும் பாங்கினை இக்கவிதை வெளிப்படுத்தியபோதிலும் உட்பொருள் உறைந்த கள் பொருள் காட்டி தையல் அவள் தைத்த கவிதை உள்ளத்தில் போய்த்தைக்கும் கள்ளத்தைக் காட்டி நிற்கிறது. மறுவடிவம் தையல் அவள் தைத்த கவிதையால் மயங்கி போதை தலைக்கேறும் மயக்கமாக, தீங்கானதல்ல அத் திங்கள், அருந்தக்கூடிய மருந்தாக கவிதை இனிப்பதாய் பொருள்பட அமைத்தமை அருமை!

உள்ளத்துள் எழுகின்ற உணர்வதனை வண்ணத் தமிழால் வாஞ்சையுடன் உரைக்கும் உண்மைத்தனங்களை ஊன்றி நிற்கிறது "மன தின் தின்னா" இன்பம் மனதிற்குள் எழுகின்ற பொழுது அப்பழுக்கற்ற காதல் விளங்குகிறது அங்கே உண்மை துலங்குகிறது.

"அவளும் இறை"
பெண் அணுவாவாள் இயங்கு சக்தியின் இறை
பண் அவள் பரிமாணம் புண்பட்டால் புலனழிப்பாள்
கண்ணென ஒற்றின் கடவுளாவாள்...

ஆற்றல் மிகு பெண்ணவளின் சக்தியை போற்றுகின்ற விதமாக இக்கவிதை ஊற்று கண்ணாகிறது. பெண்மைக்குள் ஒளிந்திருக்கும் மாபெரும் இயக்கத்தை மாண்புறுத்தும் பாங்கினை இக்கவியில் காண்கிறேன்.

நினைவுகள் சுமந்தலையும் நித்திய வாழ்வதனில் மயங்கியே போகின்ற மறைபொருள் துலக்கிவிட "மருந்து" எனும் கவியூடாக விருந்தாக்கி அளித்த விதம் வியப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயங்களால் இதயங்கள் உடைக்கப்பட்டிருந்தால்
நியாயங்கள் செத்துவிட்டதாய் எண்ணாதே
நேசங்கள் கூட மோசங்கள் செய்துவிடும் அதிகமாவதால்,
நேசத்தை நேரெடுத்து பாசத்தை மருந்தாக்கி
அன்பை அதில் ஊற்று, ஆறிவிடும்
காயங்கள் மட்டுமல்ல கல்லான இதயமும்கூட!

அடுத்து "பொதுப்புலம்பல்", அல்ல, அது பொக்கிஷம்! இப்பார் முழுதும் பாங்குற வேண்டு மெனும் பேரவாவில் ஈங்கு இக்கவித் தொகுப்பின் மோதுகைப் பாகமாக, மானுட இயல்பறிந்து உளமறிந்து உன்னதம் உணர்ந்து உய்விக்கும் அருளது துலங்க, மேதினி மேன்மையுற இரத்தினச் சுருக்கத்துள் சொற்களை கோர்வையாக்கி இம்மைக்கும் மறுமைக்கும் ஏற்றதாக கவி இளைத்தமை, இறைத்தமை, இன்பம்! பேரின்பன்!

இப்பகுதி கவிதைகள் ஒவ்வொரு வரியும் தத்துவமாக மிளிர்கிறது! எடுத்துக்காட்டாக

தேரடித் தேங்காயானாலும்
உள்ளீடு பொய்க்கின் உருப்பெறாது!
சீரடி செம்மையற்றவர்
செங்கோல் வைத்திருப்பினும் சிறப்பிராது!

என்று ஆரம்பித்து தொடர்கின்ற அத்தனை கவிதைகளும் முத்துக்கள்! பலவிடயங்களை கையாண்ட கவிஞர் தமிழிலக்கண விதிகளையே தன் கவிதையின் பாடுபொருளாக, கவிக்குவமானமாக எடுத்து கையாண்ட வினைப்பயன், அணிகள், இலக்கின் அணம், உயிரான மொழியாள் போன்ற தலைப்புடைய கவிதைகள் தமிழ்கற்க வழிசமைப்பதாய் அமைந்துள்ளன.

எடுத்துக்காட்டாக: உயிருடன் மெய்யணைத்து, ஆயுதம் அழகுடுத்தி, கண்ணிமைக்கும் காந்தவிதி மாத்திரையால் குறில் கூவி நெடில் தாவ அணிகுவித்து ஆகுபெயர் அளவளாவி, பகு புகா பகாபொருள் வகை தொகை தொகாப் பயன் திணை நெறி உனை எனை அதை அளந்துலக சுவடறியா அணங்கிவள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செருக்கப்பா எனும் கவிதையில்

பா
ஒரு பா
அப்பா
கருப்பா பொருட்பா
அறப்பா
எப்பா அப்பா

இல்லை பொறப்பா
அது வெறும் சொற்பா

புதுப்பா எழுத
முனைப்பா
எடுத்த குறைப் பா

தப்பப்பா தப்பா
சிரிப்பா
செதுக்கிய புதுப்பா
அது
திருப்பா என்றும்
அறப்பா என்றும்
செப்பின்
கெடும்பா
பா ஆடை கெட்டு
பாடையேறுமப்பா

இக்கவிதை பல்பொருள் உடுத்து, கரு மறைத்து, வினாவினைத் தொடுத்து, கொஞ்சம் பருத்து, சிலேடையிலே சிலிர்த்து விரிகிறது. இதை மேலும் விரிவாக்க வேண்டியிருக்கிறது.

பா- பாடல்
ஒரு பா- ஒருபாடல்

இந்தப்பாடலுக்குள்ளே ஒருபாடல் என்று பாடலின் வர்க்கமாகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா
கருப்பா பொருட்பா
அறப்பா
எப்பா அப்பா

அப்பா- அந்தப் பாடல்.
கருப்பா- கருப்பொருள் உடைய பாடல் அல்லது கருத்துடைய பாடல் அல்லது கருமையான பாடல் அல்லது அது கறுப்பா?
பொருட்பா- இலக்கண விதியின் படியான பொருட்பா அல்லது பொருளுடைய பாடல் அல்லது பொருளீட்டுவதற்கான பாடல்
*அறப்பா-*அறத்தை வெளிப்படுத்தும் பாடல் அல்லது முற்று முழுதான (அறவடித்தல்) தூய்மையான பாடல் அல்லது அறுத்து அறுத்து கொடுக்கும் அல்லது கெடுக்கும் பாடல்
எப்பா அப்பா- எந்தப் பாடலப்பா அந்தப்பாடல்?
இல்லை பொறப்பா- இல்லையெனில் பொறையுடைய பாடல் அல்லது பொறுமை கொள்ள வேண்டும் பாடல் அல்லது பொறுத்துக்கொள் என்று ஏவி நிற்கும் பாடல்.
*அது வெறும் சொற்பா-*அது வெறுமனே சொல் கொண்டு வடித்த பாடல் அல்லது சொற்பமான பாடல் அல்லது சொல்லும் பாடல்.

புதுப்பா எழுத
முனைப்பா
எடுத்த குறைப் பா

புதுப்பா எழுத முனைப்பா- புதிய பாடல் எழுத முனையும் பாடல் அல்லது புதிய பாடலை எழுத முனைகிறாயா? அல்லது புதிய பாடல் எழுது முன் முனையாக இருக்கின்ற பாடல்
புதுப்பா எழுத முனைப்பா எடுத்த குறைப் பா- இல்லை இது புதிய பாடல் எழுத முனைகின்றதனால் பாடலில்லை, குறை உடையதாக உள்ளது அல்லது புதிய பாடலை எழுதி அதை குறைத்துக் கொள்வது அல்லது முற்றுமுழுதாக குறையுடையது.

தப்பப்பா தப்பா
சிரிப்பா
செதுக்கிய புதுப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பப்பா தப்பா- தப்பான அந்தப் பாடல் தப்பா? அல்லது சொல்வது தவறப்பா அல்லது தப்பாகிப் போகாது அந்தப்பாடல் தப்பான அந்தப் பாடல் தப்பானது

சிரிப்பா செதுக்கிய புதுப்பா- சீர்மைப்படுத்த எழுதிய புதிய பாடல் அல்லது நகைச்சுவைக்காக எழுதிய புதிய பாடல் அல்லது இந்தப் பாடலைப் பார்த்து என்ன சிரிக்கிறாயா?

அது
திருப்பா என்றும்
அறப்பா என்றும்
செப்பின்
கெடும்பா
பா ஆடை கெட்டு
பாடையேறும்ப்பா

அது திருப்பா என்றும் அறப்பா என்றும் செப்பின்- இப்படியான இந்தப்பாடலை திருப்பா என்றும் அறப்பா என்றும் சொன்னால்
கெடும்பா- பாடல் கெட்டுவிடும் அல்லது பாடலுக்கே கெட்ட பெயர் வந்துவிடும்.
பா ஆடை கெட்டு- பாடலுக்கான பொருட் கெட்டு அல்லது அலங்காரம் கெட்டு அல்லது கரு கெட்டு
பாடையேறும்பா- அதற்கு மரணம் நிகழும் அல்லது அப்பாடல் புதைக்கப்படும்...

இவ்வாறு சிலேடையில் கவிபாடும் திறன் அபாரம்!

"படிகற்கள் படிகள்" எனும் கவிதையில் கற்றுக்கொள் எனும் நற்சிந்தனையை ஊட்டுகின்றதாய் இருக்கின்றபோதும் கவிதையின் ஓட்டம் ஆங்காங்கே தடம் புரண்டு, பொருள் புரண்டு போவதாக தோன்றுகிறது. இருப்பினும் தடத்தை இணைக்க முயல்கிறேன்.

படி
படிப்படி உனைப்படி
எனைப்படி.
அகம்படி முகம்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்படி அதன்
பொருட்டுப்படி

அறப்படி அறம்படி
திறம் அடி எனப் படி
கடிமனம் கடக்கப் படி
முடியடி தெளியப்படி
நெறிப்படி வாழப்படி உன்
அடிப்படை அளந்து பிடி.

மண் மடி நினைத்தடி
உன் அடி ஆழப்படி
சுவடடி அடித்தளம்
அதை பிடி பிடி
இறுகப்பிடி

முகமூடி
உலகோடி அடிகெட்ட
அடிவருடிகளை
வெடியாகி வெடித்தெழ
விடிகின்ற பொழுதெல்லாம்
அடியாகி அணியாகு.
அதற்காக அடி படி
அடிப்படை அறிந்து படி

இதன் பொருள் காண்போம்.

படி
படிப்படி உனைப்படி
எனைப்படி.
அகம்படி முகம்படி
பொருள்படி அதன்
பொருட்டுப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி- கற்றுக்கொள்

படிப்படி உனைப்படி- படிப்படியாக உன்னையும் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் கற்றுக்கொள் அல்லது உனைப்படித்தலே படிப்பின் உச்சம் ஆதலால் கற்றுக்கொள்.

எனைப்படி- என்னையும் கற்று வைத்துக்கொள்

அகம்படி- மனதின் உள்ளே புகுந்து பகுத்தாயும் கலையை கற்றுக்கொள் அல்லது மனம் படி அல்லது உனதில்லம், உனது இடம் எதுவென நினைக்கிறாயோ அதைப்படி

முகம்படி- முகத்தைப் பார்த்து எடைபோடும் தன்மையை படி அல்லது முகக்குறிப்புக்களை உணரப்படி அல்லது புறத்தோற்றம் படி

பொருள்படி- பொருளியல் கற்றுக்கொள் அல்லது நீ கற்கும் அத்தனை விடயங்களின் அர்த்தம் என்ன என்று கற்றுக்கொள் அல்லது பொருட்களைப்பற்றி அறிந்துகொள் அல்லது பொருளீட்டப்படி

அதன் பொருட்டுப்படி- மேற்கூறிய அனைத்தும் தேவையானால் அதன் பொருட்டுப்படி.

அறப்படி அறம்படி
திறம் அடி எனப் படி
கடிமனம் கடக்கப் படி
முடியடி தெளியப்படி
நெறிப்படி வாழப்படி உன்
அடிப்படை அளந்து பிடி.

அறப்படி- ஒன்றைப்பற்றிய எல்லாவற்றையும் அறிந்து வைத்துக் கொள்ளக்கூடிய வகையில் படி அல்லது தீயவை அறுந்து போகப்படி

அறம்படி- நல்லொழுக்கம் படி அல்லது அறத்தின் வழிநின்று படி

திறம் அடி எனப் படி- திறன்தான் அடிப்படை, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திறன் இருக்கும் அதனை அடிப்படையாகக் கொண்டு படி அல்லது ஒவ்வொன்றையும் புட்டுப்புட்டு வைக்கக்கூடிய வகையில் படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிமனம் கடக்கப் படி- கடுமையான கல்மனம் கொண்ட உள்ளங்கள்கூட கரையவைக்கும் வித்தையைப்படி அல்லது அவற்றையெல்லாம் கடந்து போகக்கூடிய ஆற்றல் படி அல்லது கொடிய எண்ணம் கொண்டவரை விட்டகலப்படி.

முடியடி தெளியப்படி- தொடக்கம் முடிவும் தெளிவு பெறப்படி அல்லது இலக்கை எட்டும் உறுதியுடன் படி அல்லது முடிந்த அளேவேனும் தெளிவாகப்படி அல்லது குமுகாயம் இவன் ஒரு சிறந்தவன் என்று முடிசூட்டப்படி அல்லது உனது வருகை, புறப்பாடு என்ன என்று அறியப்படி

நெறிப்படி வாழப்படி- உலகத்து நெறியறிந்து வாழப்படி அல்லது ஒவ்வொன்றையும் ஒழுங்கு படுத்தி வாழ்வது எப்படியென்றுபடி அல்லது நீ வாழவாவது, உன் வாழ்க்கைக்கு தேவையானதையாவது படி

உன் அடிப்படை- உனது மூலம் என்ன என்று அறி, அதுவே உனது பலம் அல்லது அதுவே உனது படை அல்லது அதை உருவாக்கு.

அளந்து பிடி- எதையும் அளந்தளந்து பிடித்துக்கொள் அல்லது எதையும் அளவேடு பேணு அல்லது ஆழம் அறிந்து அதைப்பற்றிக்கொள்.

உன் அடிப்படை அளந்து பிடி- உனது மூலத்தைப்பற்றிக்கொள் அல்லது எல்லாவற்றையும் உனதாக்கு அல்லது உன் அடி(தாக்குதல்), உன் படை, உன் அளவு (எல்லை) அனைத்தையும் உன்கட்டுப்பாட்டில் கொண்டுவா!

இவ்விடத்தில் முரண் ஆரம்பிக்கிறது. அழகிய நீரோடையில் மண் வீழ்ந்து கரைந்து நிறம் மாறுகிறது. தேசியத்தை நேசிக்கும் கவிஞர் என்பதால்... அடி, உடை, படை எனும் ஆதங்கம் இவருக்கு வருகிறது. ஆதலால் தேசியத்தை நேசிக்க தனியே வேறு ஒரு கவிதை புனைந்திருக்கலாமோ என்று எண்ணத்தோன்றுகிறது. இருப்பினும் தொடர்ந்து பார்ப்போம்.

மண் மடி நினைத்தடி- தாய்மண்ணை நினைத்து சண்டையிடு அல்லது மண்ணை (தாய்நிலத்தை) நினைத்து அடியெடுத்து வை அல்லது பூமியை நினைத்து நன்மை பிறக்குமாறு உனது ஒவ்வொரு அடியையும் எடுத்து வை!

உன் அடி ஆழப்படி- உனது அடிப்படையை ஆழமாகப்படி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே உன் அடி "ஆளப்படி" என்று வந்திருந்தால்...- உன் பரம்பரை ஆளும் வகையில் உன் படிப்பை மேற்கொள் என்றோ அல்லது உனது கட்டுப்பாட்டில் அனைத்தையும் ஆளப்படி எனும் புரிதலை ஏற்படுத்தியிருக்கும் என நினைத்து தொடர்கிறேன்.

சுவடடி அடித்தளம்- தடங்களே தடயங்கள் அல்லது தடத்தைப் பதி அதுவே உன் தளம் அல்லது எல்லைகளை கோடிட்டு (வரைபட) அதனைத் தளமாக்கு

அதை பிடி பிடி இறுகப்பிடி- மேற்கூறியவற்றைப் பிடி, அந்ததப்பிடி இறுக்மானதாகப்பிடி.

முகமூடி
உலகோடி அடிகெட்ட
அடிவருடிகளை
வெடியாகி வெடித்தெழ
விடிகின்ற பொழுதெல்லாம்
அடியாகி அணியாகு.
அதற்காக அடி படி
அடிப்படை அறிந்து படி

முகமூடி- முகம் மறைத்து அல்லது மறு வேடமணிந்து

உலகோடி- உலகெங்கும் ஓடி அல்லது உலகெங்கும் அலைந்து அல்லது உலகத்தின் கோடிவரை சென்று

அடிகெட்ட- அடிப்படை அற்றுப்போன அல்ல தன்மானமற்ற அல்லது பட்டுப்போன

அடிவருடிகளை- ஈனப்பிறவிகளை அல்லது ஏய்த்துப் பிழைப்பவரை அல்லது அடிப்பக்கத்தை தடவிக்கொடுப்பவரை...

இந்த இடத்தில அடிவருடிகளை என்று சேர்த்து எழுதாமல் "அடி வருடி களை "என்று பிரித்து எழுதியிருந்தால் அதன் பொருள் மென்மையானதாகவும் மேன்மையானதாகவும் அமைந்திருக்கும்.

எடுத்துக்காட்டாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி வருடி களை- அடிவருடிகளின் அடிப்படையில் நெருடலை ஏற்படுத்தி அவர்கள் மனதில் இருக்கும் எண்ணங்களை களைந்தெடுத்து உன்பக்கம் உள்வாங்கு எனும் நற்செயலைச் செய் என்றோ அல்லது அடிவருடிகளை களைந்துவிடு, விலத்திவிடு எனும் பொருள் துலங்கும்.

வெடியாகி வெடித்தெழ- வெடிகுண்டாய் வெடித்தெழு அல்லது விதையொன்று வெடித்து பூமியில் நன்மை பயக்க எழுவதுபேன்று எழு அல்லது கோபத்துடன் எழு

விடிகின்ற பொழுதெல்லாம் அடியாகி அணியாகு- எப்போதும் உன்னை உன்போன்ற எழுச்சிப்பாதையில் பயணிப்பவரொடு இணைத்துக்கொள்

அதற்காக அடி படி- அதற்காக அடியாதாரத்தை கற்றுக்கொள் அடிப்படை

அறிந்து படி- அடிப்படையை தெரிந்துகொள்!

ஆம், கற்றல் அவசியமானது என்பதனை கவியாக்கிய வடிவம் ஆழமானது. இங்கே முரண்படுகிறதாகப்பட்ட விடயங்களையும் கற்றுக்கொள்ள வேண்டும் எனும் நோக்கத்தில் பார்த்தால் படிக்கற்கள் படிகளாகும் என்பதில் குழப்பம் தீர்வதாகவே உள்ளது.

பெரும்பாலான கவிதைகள் இரு பொருளைத் தாண்டி பலபொருள் கூறுகிறது. இவரது கவிதைகளை ஒன்றுக்கு மூன்றுமுறை வாசித்தல் மறு பொருளுணர ஏதுவாகி நிறைகிறது. நிறை மட்டும் கூறி குறை தவிற்றல் நன்று என்பதனால் குறை தவிர்க்கிறேன். பல கவிகளை வடிக்கும்போது ஒரே சொற்கள் மறுபடி மறுபடி பயன்படுத்துவது சில இடங்களில் தவிர்க்க முடியாதென்பது உண்மை எனினும் நான் அறிந்த சில தற்கால கவிஞர்கள் வரிசையிலே சொல்லாற்றல் மிக்க கவிஞராய் திகழும் தியான் இச்சொற்காட்டில் மேலும் வேறுபட்ட சொற்களை தேடி

நிறை தருவாக சடைக்க, செழிக்க சொற்காடு சிறக்க வாழ்த்துகிறேன்.

இவ்வண்ணம்
நாடகன் கலை வளரி
ச.க. இரமணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்

இயலாள் தாலாட்டு 1

மன தின் தின்னா 31

பொதுப்புலம்பல் 55

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மனம் சூடல்

இதழ் விரித்து
புன்னகைச் சூடி
கதிரவக்காதலில்
பூப்பெய்யும் மலர்களை

கருவண்டு
இரீங்காரம் பாடி
சிங்காரம் செய்து
வட்டமிட்டு
திட்டமிட்டு
கட்டாயக் காதல்
களவில்
தொட்டுப்பேசி
மகரந்தம் பூசி
மலர்களின்
மனம் மாற்றி
மயக்கிடத்தான்
காலை
கண்விழித்ததோ.

கதிரவா இந்த
ஒருதலைக் காதலும்
உனக்கானது
மாலை சூடாவிட்டாலும்
மனம் சூடிச் செல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சோம்பல்

மேகத்திரையின்
மூடுமந்திரத்துள் பகலவன்
படுத்திருப்பதை
பார்த்திருக்க முடியவில்லை.
கைகளைத்தட்டி என்
கரங்களை நீட்டி
கதிர்களை அனுப்ப
வீரம் பேசியும்
அவன்
வெளிவரவில்லை.
நண்பர்களே
பகலுக்குள் பகலவனை
பாருக்குள் முகம் காட்ட
இழுத்து வருகிறேன்.
அதுவரை
மேகத்திரையை
கிழித்துவிடாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பனிமுத்து

பசும்புல்லில்
அடி புதைத்து
சுவடு கண்டு
நடந்தேன்.

புற்கள்
செயற்கைப் பிரசவம்
செய்திருந்தக் காலை.

என் கொலைக்கால்கள்
இரக்கமில்லாது உடைத்தழித்த
பனியின் கருமுத்து அது.

முத்துக்கள் நீருக்குள் மட்டும்
என்பதை பனிமுத்துக்கள்
பகிரங்கமாக மறுத்து
புற்களை
தாய்மையாக்கியதில்
எனக்கு மறுப்பில்லை.

ஆனால் ஞாயிறான்
உறங்கி விழிக்கும்
காலப்பிரிகையில் தவறு.
கதிர் வீசி கடும்
வெயில் பூசிய பொழுதுகளின்
கண்பட்ட காலம்
எனவே பனிமுத்துக்கள்
இறக்க நான்
பொறுப்பல்லன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மதியத்தை

கார் முகில் கூட்டம்
இருள் பூசி
பூமிக்கான வெளிச்ச வீச்சை
திரைகொண்டு மூடி
வராத மழைக்காக
வானத்தை பொத்தியிருக்கிறது.

மாயத்தில் மூழ்கி
மதியான கதிரவனே
பகலும் வந்து
வெய்யிலில்லாமல்
வெறித்துப் பார்க்கிறது.

குளிர்விட்டுப்போன
காற்றின் தொடுகை
மெய்தொட்டுச் சிலிர்க்க
கார் மேகக் காட்டுக்குள்
கண்மூடி நீ இருப்பதேன்.

மதி அத்தை
தொடும் நேரம். நீ
மதிமயங்கி கிடக்கிறாய்.
கார் கூந்தல் ஒதுக்கி
சீர் பெற்று வா.

பகலென்றால் உன்
உலாக்காலம்
பார் கொள்ள வா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பனிக்காலம்

வெள்ளிகண்டு
வெகுண்டெழுந்து
செட்டையடித்து
செருக்கோடு சேவல்
பாட்டிசைத்த
கொக்கரக்கோவை
எங்கோமான்
திருப்பள்ளி எழுச்சியாக்கி
எழுகவே எழுக.



மகரந்தம் பூசி
மலர்கள்
அலங்காரம் செய்திருக்க

உங்கள்
வருவிருந்துக்கு முன்
வண்டுகள் வன் நிகழ்வு
சூடாதிருக்க
குளிர்கால
சோம்பலை முறித்து
அறிவில்லாதவனே
அகத்துறைவோனே
காலித்தெழுந்து
கண் திறந்து வா
பனிக்காலப் பருவத்தாள்
மெய்தொட்டு சிலிர்த்திருக்க
சுடு கதிர் கொண்டு
ஓடிவா சொர்க்கம் உன்னில்
கண்டு களிக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஆசைக்குறி

மலர்களை தூவி
மகிழ்ச்சி தெரிவிக்கும்
மரம் செடி கொடிகளை
மண் இன்னும் சுமந்திருக்க
அவசரங்களை
அலங்கரித்துக்கொள்ளும்
நீங்களும் நாங்களும்
இல்லாத இருப்பிற்காக
இன்னும் ஓடுகிறோம்....

மலர்களே மணங்களை
பரப்பாதீர்கள். எங்கள்
மனங்களில் இன்னும் இன்னும்
மகுடங்கள் சூடிய ஆசைகள்
சாகுமுன் சாதனைக்காக
காத்திருக்கிறது.

காற்றுக்கும் எமக்கும்
முரண்பாடு முற்றும்போதும்
சமன்பாடு செய்துகொள்ள
சவமாகும்போதும்
காற்றிலிருந்து
பிய்த்தெடுங்கள் உங்கள்
வாசத்தை
வீணாகிவிடுகிறது உங்கள்
பூப்பெய்தல்கள்.

காலையை மட்டுமல்ல
கதிரவனையும் கடந்து
மனிதனையும் மறைத்துக்கொண்டு
அவசரங்களை
அள்ளி வைத்திருக்கிறோம்
என்ன செய்வது. இந்த நாளும்
இப்படித்தான் கடக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. குளிர்வீச்சு

நிலவாளின்
இரவொழுக்கம்
இனிதாக அவளை
மேற்கின் அரங்கத்துக்குள்
அழைத்து வந்திருக்கிறேன்.

குளிர்க்கோல
கதிரவனை கீழ்த்திசையில்
இன்னும் காணோம்.

கதிர் இன்றிய
காலையவள்
குளிர்தூக்கி வந்திருக்க
பழிச்சுமந்து
நாணுகிறாள்.

ஐயனே
வெய்யிலை
எங்கே வைத்துவிட்டு
மறைமுகமாக
செல்கிறீர்.

கண்டனம் செய்தும்மில்
கதிர் பறிக்கமுடியாதென்றா
குளிரள்ளி வீசுகின்றீர்.
இது குறையில்லையா

பரவாயில்லை
குளிர்ச்சூடி
நாள்கொண்டு வந்திருக்கும்
இன்னாளை
கரம் கூப்பி அழைக்கின்றோம்
என்னாளும் பொன்னாள்
என்பதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பதிவிரதை

பகலவனே பாரினை
பார்வையில் ஈர்ப்பவனே
பதிவிரதை ஒன்மரின்
பாசத்துக் காந்தகனே

நிலவவள் ஒளிவாங்க
நிலைக்கதிர் அளிப்பவனே
நித்திலம் தனைக்காக்க
கீழ்த்திசை புலர்பவனே

மண்மிசை நாம் வாழ
மரணத்தை சுமந்தவர்கள்
மண்ணுக்குள் விதையாகி
காற்றோடு செறிந்திருக்க

கார்முகில் களைந்தெழுந்து
கதிர்வீசி உலகுய்ய
காலையில் வருபவனே
கதிர்சூடிப்பெருமானே

காலை இனிக்க வா
கருத்தை தெளியத்தா
மீளாதுழலுய்யும் வாழ்வை
இனிக்கத்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. தாய்மை

குளிர் கால
அடக்குமுறைக்குள்
இலையிழந்து மொட்டைக்
கிளைகளை முடிகளாக்கி
மௌனங்களில்
பேசும் யேர்மனிய மரங்கள்
மடிசுமக்கும்
துளிர்களை தளிர்களாக்கித் தர
தாய்மை காத்துக்கிடக்கின்றன.

பச்சிலைகள்
காவிகளைத் தரித்து
கழுத்திறுக்கி மரக்
காலடிவிழ காத்திருக்கும்
இன்னும் சில இலைகளில்
உரமிடும் உறவு
வலுத்திருக்கின்றன.

கால அறுவடைக்கு
கருசுமக்கும் மரவேர்கள்
இலைத்துளிருக்காக
இன்னும்
இலக்கு பார்க்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. கண்விழித்தெழுக

கரு விதை ஊன்றி
கவிதை வளர்க்க
காலையைத் தோண்டினேன்.

அள்ள அள்ள குறையாத
அழகுத் தமிழை
அள்ளிப்பருக்கி
சொல்லில் காரம்தள்ளி - அடிக்
கரும்புச்சாறு பிழிந்து
வடித்துக்கொடு
வளம் செழிக்கும் என்றது
என் தமிழ்



கவிக்குள் கவிகளாய்
பிரசவம் சுமக்கும் கவித்தாய்களே
முரசறைந்து பறையிசைத்து
சொற்கூட்டி வரிபடைத்து
கதிரவக்குழந்தைக்கு
வரவேற்புரை வாசித்தல்
மரபாகிவிட்டது.

எனவே
போர்வை விடுத்து
பார்வை பரப்பி
பார் உலாவுக்கு
கார் பிரித்துவர காத்திருக்கும்
கதிர் வீச்சு காந்தளனை
கரம்பற்றிக் கொணர
காலையைத் தேர்ந்து
கண்விழித்தெழுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. விரைவு

இரவுக்கருவறையே
பகலின் பருவத்தை
காலை பிரசவித்து
மெல்ல விரிக்கும்
வெளிச்சவேகத்தின்
இருட்டின் இளவலே

வெளிக்குமுன்னே வேகமாகி
உழைப்புக்களம் ஓடி
பிழைப்புப் பற்றி
களைப்பில் கண்ணயர
காலச்சுற்றுகைக்கு
கடிவாளமிட்டு கடுகதிப்
பொறியாகி நீளவிருளை நீ
தரவில்லை.

காலைக்குமுன்
கருச்சுமக்கும் உன்னை
களிப்புற்று இரசிக்க நேரமில்லை.

பகலவனுக்கு முன்னே
பகலாக்கிச் சிரிக்கும்
வீதி விளக்கு
வெளிச்சக்கூடுகளோடு
விரைவுகளில்
கடிகாரங்களை
கடந்தோடுகிறோம்.

விடியலுக்கு வேகம் காட்டாதே
இரவை இன்னும் தூரமாக்கு.
கண்கிழிய மறுக்கிறது
கால் நடக்க வெறுக்கிறது
காலையை சற்று
கடத்தி வை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. அந்த நாள்

வெள்ளிகண்டு கிழக்கெழ
துள்ளியெழுந்து துகிலாக
துண்டொன்றை இடைச்செருகி
சிவலைக் காளைகள்
சிரசுதடவி சொல்லில்லா
மொழியாண்டு அதன்
சுகம் விசாரித்து
உணர்வில் ஒத்து
வண்டிகட்டி வந்தக்கழனி
சோற்றுச் சொந்தக்காரன்
வெள்ளியை விளக்காக்கி
தள்ளி வந்தக் காலம் அது

இங்கே
விடிவதும் முடிவதும்
இருட்கரத்தின் இருப்பாகி
வெள்ளி பார்க்கிறோம்.

என்ன செய்வது

பழஞ்சோற்றுச்சாறும்
பச்சைமிளகாய் உடன்
வெங்காயக் கூட்டும்
வரம்போரக் காற்றும்
வந்தணையும் அயல்
தோட்டத் தோழமையும்
வெள்ளிபோல்
வெழுத்தக் காலையை
அள்ளிப்பருகிட அந்த நாள் வருமா
ஆனந்தக் களிப்பை
அகம் நிறைக்க
சொந்த மண் வெளிக்குமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பார்வையில் ஒரு பாவை

பார்வையில்
இலக்கணத்தாள்
இடைக்களைந்து
பாவை தொட்டு
பார்வை இழந்தேன்.

இமைகிழிய மறுக்க
இறுகிய இருளில்
போர்வைக்குள் புதுப்புது
பார்வைகளில்
கனவுதேசத்தை
கட்டிக்கொண்டிருந்தேன்.

பாவை பற்றி
பகிரவெண்ண அப்
பாவை கண்டெழவே
இமைக்கிழியல்
விழித்திறந்து கனவுக் காட்சி
களைந்துபோச்சு.

பா வடிக்க
பார்வை கொண்டு
போர்வைப் புகலை
புறந்தள்ள
இரவுகளைய எழுந்த
காலை என் முகத்தில்
சிலிக்கிறது

பாவை வேண்டின்
பார்வை கெடும் அதனால்
கார்சூழ்ந்த காலையை
கண்ணிருத்தி நகர
பார்வையே உய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. வண்டின் தேடல்

காற்றைக்கிழித்து
கருவண்டு கானமிசைத்து
கண்வீசிப் பார்த்தும்
காணவில்லை.

மேகத்திருள்
காலைவிடியலை
மூடி வைத்து
விடியலைத் தள்ளி
நகர்த்துகையில்
கருவண்டின்
சிருங்காரத்தை எந்த
மலரும் ஏற்கவில்லை.

பத்தியத்தால் பச்சயமின்றி
தவமிருக்கும் தாவரத்தாள்
மூச்சிறுக்கி முளைகாத்து
பட்டதுவாய் பண்பிருக்க
தேன் தேடி தென்றல் கிழித்து
மலர்சூட மயங்கி நிற்கும்
கருவண்டே

குளிர் அள்ளி வீசி
களிபறித்துத் திரியும்
நனி குளிர் நாளில்
மரங்களின் தவத்தை
குழப்பாதே.

இலைதுளிரில்
மணம் சூட மலர்கள்
பிறப்பெடுக்கும் அப்போது
பற்றிப் பரவசமாகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. கொடுமழை

வானத்து
உடுக்களின் அழகு
பொறிப்புகளை
மூடி
நிலா உலாவை
பலம் கொண்டு
தடுத்து நிறுத்தி
கருமேக
போர்வைகொண்டு
கதிரவனைத் துண்டித்து
அவன்
ஒளிக்கதிர்களை ஒடித்து
மழை என்னும்
இரசனையை முறியடித்து
நீர்கொட்டி நிரப்பும்
காலத்தாளின்
வெறுப்புமுகம் இன்னும்
சிரிக்கவுமில்லை
சிரசில் எம்மை
நுளைக்கவும் இல்லை.

கடும்மழையைக் கொட்டி
கருணைக்கடக்கும்
காலமே
காணும் நிறுத்து

அதிகமானால் எல்லாமே
அறன்கெடும்
புறம்பாடல் அழகில்லை
உனை புகழ்தொழுக நீ
நீயாகவில்லை.
இயல்பாய் இயங்கி வா..
இடர் முட்டா மழைகொட்டி
சுயமாகி நடந்தொழுகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கள்ளுண்ட தமிழ்

கதையில்
வி தை ஒன்று
இடைச்செருகி
கவிதை சூடி
கருக்களில் கள்
புதைத்ததால்
போதை.

விதைகள்
மலராகி மது சூடி
வண்டணைத்து
கள்ளூட்டும்
வரமோ...

இல்லை.....

தமிழ் கள் அற்றது
தமிழுக்குள்
கள்ளிருத்தல்
தகுதிபெற்றது.

கதைவிடவில்லை
விதை விதைக்க
கவி தைக்கிறது.

வேண்டாம் வேண்டாம்
விடுமுறைக்குள்
குழப்பு(ப)ம் கள் வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. மேகத்துளி

சிறு மொட்டொன்று
இதழ் மூடி
மௌனத்தில்
நாணி நிற்க

மேகத்துளியொன்று
மோதியதன் நாணத்தைப்
பரிகசிக்க

இதழ்கட்டு விட்டு மலர்
மெல்ல விரிய – அதைத்
தொட்டுச் செல்ல
தென்றல் தன்
படையனுப்ப

கரும் பட்டுடைப்
போர்த்த வண்டு
பண்ணிசைத்து
அருகணைய
மகரந்தம் கொட்டி
மகிழ்கிறது மலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. மே(மோ)கமுத்து

மேகமுத்தொன்று
மென் குளிர் கரம் பற்றி
வான்விடு
தூதாய் என்
உடல் தொட வந்தது.

மழையெனும்
சூடலை மறுத்து
தூறல் என்பதை துறந்து
துளியெனத் தன்னை
வழிமொழிந்து என்
அகம்தொட்டு நெகிழ
அவசரமாய் வந்தது.

முகம்மினுக்கி
முத்துமணிச் சூட
எத்தனித்த என்னை
சத்தமின்றி பார்த்து
புன்னகைத்த பூவொன்று
தன் பத்தியத்தை
சிந்தும் துளிக்காக
பொத்திவைத்திருக்க

முத்துத் துளியதை
கொத்துப்பூவிற்காய்
கொடையாக்கி நெகிழ நான்

விடையானேன்
இரண்டறக்கலந்த
துளியுள் துவண்டது மொட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. வயதேற்றம்

அள்ளிக்கொண்டு
விரைந்தோடும்
காலமே - உனக்கு
வேகத்தடை இல்லையோ

விநாடிகளை செப்பனிட்டு ஓடி ஓடி
கடத்திச் செல்லும் - உன்
விடிகாலைப் பொழுதுகளின்
விரைவுகளில் என்
வயதுகளும் தேய்க்கப்படுகிறது.

எட்டிப்பிடித்து
கட்டிக்கொள்ள எண்ணக்
கணக்கு ஆயிரம் - நீ
வெட்டித்தனமாய்
விரைந்தோடும் காலவேகத்தால்
மாட்டிக் கொண்ட
மனவிறுக்கம் பல்லாயிரம்.

நில்
விநாடிகளில் நொடிகளை
கொய்தெறி
நிமிடங்களை
நேர்வழியில் மாட்டாதே
நாட்களை உறக்கத்தில்
அமிழ்த்து.

இனிக்க வரும் நாட்களே
இனி மெல்ல வாருங்கள்
களித்துச் சுவைக்க
விழித்து நகருங்கள்
நாளைக்குள்
இன்றை அழகுபடுத்த
இடந்தாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. காற்றுக் காதல்

காற்றே
கைவீசி என்
உயிர்வரை உரசி
மெய்யிழுத்துச் செல்லும்
அருவுரு அழகே

நீ
மூங்கில் தழுவி
நாக சுரம் புணர்ந்து
இசையாகி
உயிர்க்கும்
பண்பழகி.

விசை வீசி
அசைவுக்கும்
இசைந்தாடும் மேமிசை
ஓசையின் ஒலியழகி

விழிபட்டுப்போனாலும்
மெய்தொட்டு நகர்ந்தாலும்
உயிர்வாயுவை
உள்ளிருத்தி
கள்ளமாய் கடந்தோடும்
முதல் காதல்
பேரழகி

உன்னை
உட்கொண்டெழுந்து
கண்ணுற்று மகிழ
கருவாகி கலந்த என்
காந்தக் காதல்
கள்ளி நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. திங்கள்

தின் கள்ளோ
தீங் கள் ஓ..
முகம் கள் தெளிய
அகம் கள் இனிக்க
திங்கள் மனத்
திரு (த்) தங்கள் சூடி
உங்கள்
விருப்பங்கள் ஆள
வந்தத் திங்கள் இதுவோ

அங்கங்கள்
பங்கங்கள் ஆகி
துன்பங்கள் மேவி
வாழ்வின்
வசந்தங்கள் போயின்
தீன் கள்ளும் கெட்டு
திங்களும் மரிக்கும்.

எனவே
பொங்குங் கள் ஏந்தி
மகிழ்ச்சி
கொள்ளுங்கள்
மதி வெல்லுங்கள்
திங்கள் ஆல்
ஆளுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. காலையின் அழகு

காற்றுக்கிழித்து
காதடைக்கும் ஊர்திகளின்
உராய்வோசையை
காலைப்புலர்வு கண்டெழுந்து நகர

கத்துக்குரலெடுத்து
கவிபாடி தன்
காதலியை அருகழைத்து
வித்தைக் காட்ட
விளையாடி கிளையோடி
சத்தவுலகுள்
கத்திக் கத்திக் கவி பாடும்
சிட்டுக்குருவி.

பூப்பெய்திய புதுமலர்கள்
இதழ் விரித்து காற்றுடுத்தி
சீண்டுவார் யாரென்று
சிலித்தழைந்து காத்திருக்க

குடுகுடுவென கடுகதியாய்
விறுவிறுப்பாய் விரைந்தோடும்
அவசரங்களே

அரிதான புலர்விது
அலங்கரித்துச் செல்லுங்கள்.
விடிகாலைப் பொழுதை
மகிழ்வாக்கிச் சூடுங்கள்

சிட்டுக்குருவியை
கண்ணள்ளிப் பருகி
கனிவாகச் சொல்லுங்கள்
காதல் வாழ்க என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. நிலாரதம்

இன்று
உடுக்களை உற்று நான்
வானவலை செய்கையில்
நிலவாள் இன்னும்
வெள்ளைச் சரிகையில்
கொள்ளை அழகுடன்
மெல்ல
நகர்வதைக் கண்டேன்.

கதிரவனைக்
கண்டுச் செல்லும்
மோனத்தவம் அவளுக்கு

கள்ளி
ஓரக்கண்வீச்சில்
ஒய்யார நடைபற்றி
அசைய மறந்து மிதக்கிறாள்.

அவளின்
ஒளிக்காதல் வீச்சுக்கு
வானப்பஞ்சுகள்
கார் முகம் மறைத்து
வெண்பஞ்சின்
சாமரை சூடலில்
திறந்த வானத்தை
உடை களைந்து விலத்த
கதிரவக்கள்ளன்
கதிர் கைநீட்டி
கீழிருந்து வருகிறான்
பாருங்கள்.
அவளுக்காக
அலங்காரச் சிவப்பில்
கீழ்வானத்தையே
நனைக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. நனி குளிர் நாடு

குளிர்காலச் செடிகளின்
தவக்காடு.
மொட்டைகளாய் அம்மணங்களாய்
இலை
ஒட்டிக்கொள்ள முடியாத
வெற்றுகளாய்..வெறுமைகளாய்
காத்திருப்புத் தவம்
செய்கின்றன

வேர்களும்
பால் சுரக்கும் மார்புகளை
பச்சிலைக்கு பருக்கமுடியாது
குளிர்கால வேள்வியில்
தவப்பொருளாய்
இன்னும் வசந்தம்
வந்தெழுப்பும் வரை
காத்திருக்கிறது.

மலர் காட்டி முகம் சிரிக்க
இலைபெருக்கி அழகணிய
வண்டழைத்து
விருந்து படைக்க
வரும் காலம்
பார்த்திருக்கும் இன்றின்
ஆண்டிக்கோல அறம்பாடு
பொறுமை என
விதிக்கப்பட்டிருக்கிறது.

காத்திருப்பும் இனிக்குமென்று
இயற்கை
குளிர்போர்த்திருக்கும்
இந்த கடும்பனிக்கால
கருவறை திறக்க
காலம் சுற்ற வேண்டுமோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. இமைக்காதல்

இமைகள் இரவுகளின்
விரிவாக்கத்தை விரும்புகின்றன.

விழிகளின் பொழிப்புகளில்
ஏற்படும் கருச்சிதைவுகளை
கள்ளத்தனங்களை
மூடிமறைக்க முற்படுவதில்லை.

கீழிமை தேக்கித்தள்ளும்
விழி வழி வலி நீரை
ஆனந்த மடை உடைப்பை
அளவெடுத்து
கன்னம் கடத்துகையில்
மேலிமை ஒட்டாத
புகைச்சலின் புலம்பலையும்
ஏக்கப்பிசைவையும்
இணைந்தே கொட்டுகிறது.



மேலிமைத் தொட்டுச்செல்லும்
மெய்ப்படு மாத்திரைக்குள்
மயங்கிப்பிரியும்
இமைகளை இரவுகளில்
இறுக்கி விடுங்கள்.

கள்ள விழி கண்ணயரட்டும்
இமையிரண்டும் இறுக்கிக்
களிக்கட்டும்.
விடியல் முட்டும்போது
விழிகொண்டு தட்டுங்கள்
களித்த இமை
நாணிக்கிழியட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. மாலை சூடு

நீர்க்குமிழ் கொய்து
கதிரவக் கணை ஆய்ந்து
காற்றின் துகள் பிய்த்து
மணற்கயிறு கட்டி
மாலையொன்று செய்தேன்.

அதைச்
சூடும் ஒரு கழுத்தை
சுவர்க்கத்தில் போட்டழுத்தி
வெண்சங்கு வேண்டுமென
வெந்தெரித்த தீச்சுவையுள்
கண்வீசித் தேடியும் மாலை
கொள்ளாள் இல்லை.

ஏகமாக
சூடு பொருள் என்றாலும்
எடுத்தணிய எண்ணாதீர்
எடு கொல் பிழை
இல்லை இல்லை
எடுகோள் பிழை

திட்டி முறை கா தீர்
தினம் தினம் நான் கிழக்கிழுத்து
விளக்கு வைக்க
படுத்திருந்து எழுந்துவருகிறான்
பகலவன்.
இன்று
பாடுபொருள் தரவில்லை
பா தகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. இல் அறப் பால்

கதிரவன்
மாலைக்கு மகுடம் சூட்டி
இல் அறப் பால் புகும்
இரவுத் தொடு கை
மாலை.

மேற்கின் முகவாயில்
கதிரவன் கதிர் கவ்வி
இருள் சூட்டி
நிலவுக்குப் பாதை கட்டி
வானவுலாவுக்கு
வடமிழுக்கும்
சிவந்த கரங்களை
அப்பிக் காட்டுகிறான்.

அவன்
பொன்னள்ளி தெளித்த
வானப்புதையலில்
மறைமுக தாரகைகள்
மினுத்துச் சிரித்து
அழகு போதையில்
நிலவு நகர்த்தும்
வண்ணக்கோலம்

இல்லறத்தான் இமைகளின்
இணைவுகளுக்கு முன்
இனித்த நாளை
களித்து நகர்த்த
இருள் போர்க்கும் அழகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. கருத்துரை

இரவு விலகலின்
நிறைவுரையை
கீழ்வான செவ்வோடை
முகப்புரையாக்கி
இன்றை
பிரசவித்தமையை
பறவைகளின்
பாவுரைகள்
தத்தம் மொழிகளில்
மதிப்புரை
செய்துகொண்டிருக்க

மொட்டுகள் முகப்பூச்சுகளை
இதழ்களில் அணிந்து
கதிரவனின்
காந்தம் கண்டு
நாண முற்று விரிந்து
வண்டின் வரவெண்ணி
மகரந்தம் சுரக்க

நிரந்தரமில்லா
வாழ்வுச்சுமையோடு
பறந்தோடப் பாயும்
மனிதக்கூட்டம் அவதியில் ஓட

இன்றையும் எடுத்துக்கொண்டது.
ஒரு நாளாய் இயற்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. சிறுவண்டின் சிறப்பு

மகரந்தம் பூசி
மஞ்சளாடி
மலர்விட்டு புறப்பட்ட
சிறுவண்டே

மதுபோதை தலையேற
இரிங்கார சுதியேற
பங்கார் பழனத்தர் பார்வலன் செவிப் பட்டு
பார் வெளிச்சம்.

பாரெல்லாம் வெளிச்சம்.
வெளிப்பட்ட நாளிதழ்
தேனாக இனிக்க
நறு மணமாகி மணக்க

மதியவள் நகர
மலர்மகள் விரிய
பனிமுத்தாள் நாண
மேகமகள் விலக
மோகத்தாள் பற்றிழக்க
பாரவள் மெய்தீண்ட
பச்சையத்தால் பசி களைய
பார் வண்டே
பகலவன் உன் பாட்டால்
பார்காண வருகிறான்.
பார் காக்க ஏர் பிடிக்க
கதிர் வீசி ஒளிப்பரப்பி
கஙனிகளை கவர்ந்தணைத்து
பள்ளிவிட்டுப் பகலவன் - உன்
பாட்டுக்காக உலாவருகிறான்.
சிங்கார சிறு வண்டே
ஒய்யார உன் பாட்டு
மெய்தீண்டும் மேலிசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. விழிகள் பேசும்

விழிகள் பேசும்
மொழிகளை
கோர்த்துக்கொள்ளும் மனங்கள்
வாசிப்புகளில்
பிழைகளை செருகி
மொழிபெயர்ப்புகளில்
கருத்து மாற்றம் செய்யுமுன்
மீள் வீச்சில்
விழிகளின் விளக்கத்தை

அளவு பார்த்து
உட்செருகல் சிறப்பு.

நிலைகள்
நிர்ப்பந்தங்கள்
சினங்கள்
காயம் பூசிய
மனங்கள்

அடக்குதல் விலகி
விழிகளில் வேர்கொண்டு
ஒளிவழி
வெளிப்படுத்தும்
மொழிக் குழப்பம் அது.

நாளை பார்வை
மொழியை
அழகுபடுத்தலாம்
காத்திருந்து வாசியுங்கள்
அவசரங்களில்
விளிப்புகள் வேறுபடலாம்

.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன தின் தின்னா

1. அவளும் இறை

பெண்
அணுவாவாள்.
இயங்கு சக்தியின்
இறை.

பண் அவள்
பரிணாமம்.
புண்பட்டால்
புலனழிப்பாள்.

கண்ணென ஒற்றின்
கடவுளாவாள்.

கருணைப்பெண்களின்
நினைவில்
கருவும் உருவாகும்
களியும் நிறைந்தாலும்
இழிவரல் கண்டால்
இரண்டும் முரணாகும்
பெண்
பெண்ணானால்

அவள்
இயங்கு சக்தியின்
இறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கண்ணீர்

தலையணைகள்
தீக்குளிப்புச் செய்யவுள்ளன

நித்திரைக்கு
முன்னும் பின்னும்
உங்கள்
நினைவுலக ஆட்சியால்
பித்துப் பிடித்து
செத்து எழுகின்றனவாம்

நினைவுகளை
களைந்து விடுங்கள்
அல்லது
தீயிட்டு கொளுத்திவிடுங்கள்.

ஏக்கங்களில் எரிந்து
தாக்கங்களில் கண்வழி கசியும்
கண்ணீரின் சுடுகையில்
பற்றியெரியும்
தலையணைகளுக்கு
பாவத்தண்டனை போதும்.

எழுந்தாடும் மனங்களின்
எல்லையற்ற பொதிவுகளில்
வரிவிதிப்பை வரையறை செய்து
பங்கீடுகள் செய்து பாருங்கள்.
கண்ணீரும் குளிர்மை பெறும்.

விதைத்தால் விளைபயிர்
விளைந்தால் அறுவடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நியாயப்போலி

இருள்...
தனிமை...
பயம்...

விழிகளைத் திறந்தேன்
வெளிச்சம்.

அடடா...

இமைகள்
சில நேரங்களில்
மனதோடு
மயங்கிப்போகின்றன.

அதனால்
மூடிய விழிகளையோ
திறந்த விழிகளையோ
இமைகள்
நிராகரித்துவிட்டு
மன முழக்கத்திற்கு
மண்டியிட்டு
மாரடித்துக் கொள்கின்றன.

இனி
தீக்குச்சிகளை
புருவத்தில்
புதைத்துக்கொள்ள வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. காயம்

இரத்தமும் தசையும்
நரம்புகளும் எலும்புகளும்
பிணைந்திருக்கும்
உடம்பில்
நினைவுகள் செருகியிருக்கும்
இடமெது
காட்டிக்கொடுங்கள்
கிள்ளி எறிவோம்.

5. பூச்சு

கண்ணாடி காட்டும்
முகத்தை உடைத்து
அகத்தின்
படிமங்களைத்
அளந்து பார்த்தால்
புதைவுகளில்
மறைந்தும்
மறந்தும்போன
கண்ணாடி முகம்
முகப்பூச்சில்
சிதைந்திருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. உறக்கம்

விழிகளை இறுக்கி
இருளைப் புகுத்தி
இருளை
ஏற்படுத்திக் கொண்டப் பின்னும்
உறக்கத்தை துரத்தி
விளக்கேற்றி வைத்து
விவாதம் செய்யும்
மனசின் ஓடுபாதையை
இழுத்து மூடி
கதவடைப்புச் செய்ய
ஊரடங்கு
சட்டம் போட்டும்
அடங்க மறுக்கும்
அகத்துக்குள்
எந்த அரக்கி
நங்கூரம்மிட்டிருக்கிறாள்.

7. பிரிவு

மௌனங்களால்
மூடிவைத்திருக்கும்
நினைவுகளை
காலம்...அழுத்தி

நகர்த்தும் போது
இழப்புகள்கூட
ஏற்கப்படுகிறது.

இயலாமையல்ல
அது
இலக்கணப்போலி
இருந்தும் இல்லை
இல்லையெனினும்
இருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. விதி

கொடி இடை
ஆள் - நல்
இதழ் விரிப்
பூ.

ஒரு
கொடியிடையாள்
கொய் தூர (என)
வதுவை
வை தாள்.

பொது விதி
பூ கொய்தல்

காய்
மரு வி தை
இன்றி
பூங் கொடி
இடை ஒடு
கெடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. தொடரி

பாடப்புத்தகம்
பக்கங்களைத் திறந்தும்
பார்வை கொத்தப்பட்ட
குறுகிய கால சுய
இழப்பில் ஒரு
மீட்சியற்ற ஒளிப்பாச்சல்

மனமெங்கும்
நில அதிர்வின் தடுமாற்றம்
புரிந்து கொண்ட
புத்தகம்
காற்றின் கரங்களைப்பற்றி
மனதுக்கு ஒத்து வேகமாகப்
படபடத்தது.

விநாடிகளில்
வீசப்பட்ட விழி வீச்சில்
கொய்தெறியப்பட்டது
உயிர்க் கவசம்.

மொழியிழக்க
முற்றும் துறக்க
பலிகொண்ட பார்வை அது.
அன்று
பாடப்புத்தகம் மட்டும்
படபடப்பை
நிறுத்திக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. என்னுடன் நீ

தொட்டதெல்லாம்
நீதான்.

ஆடைகளைத் தொட்டால் உன்
தேர்வுகள் தெரிகிறது.

காலணியை

போட்டால் உன்
தேடல்கள் தெரிகிறது.
மேலங்கியைப் போட்டால்
உன் மென் புன்னகை
தெரிகிறது.

நீ தொட்டு தொட்டு
தந்ததால் உன்
முகம்மட்டுமே
சிரிக்கிறது.

11. மருந்து

காயங்களால் இதயங்கள்
உடைக்கப்பட்டிருந்தால்
நியாயங்கள்
செத்துவிட்டதாய்
எண்ணாதே

நேசங்கள்கூட
மோசங்கள் செய்துவிடும்
அதிகமாவதால்.
நேசத்தை நேரெடுத்து

பாசத்தை மருந்தாக்கி
அன்பை அதில் ஊற்று

ஆறிவிடும்

காயங்கள் மட்டுமல்ல
கல்லான இதயமும்கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. ஏக்கம்

கருவறையை அறுத்தெறிந்தால்
தாய்மையில்லை
காதலை பிரித்தெறிந்தால்
வாழ்க்கையில்லை
நட்பை பெயர்த்தெடுத்தால்
அன்பு இல்லை

ஆசை
விருப்பு
வெறுப்பு
எல்லாவற்றையும்
தலையணைக்குள்
திணித்து
எண்ணங்களை
விழிகளில் தேக்கி
கண்ணீரில்
நீ எழுதும்
மௌனத்தின் கோடுகளில்
எத்தனை
வாழ்க்கைகள்
புதைக்கப்படுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. தாக்கம்

வாழ்க்கை வட்டத்துள்
வடிவங்களை
மனங்கள் மாற்றுவதும்
காதல் கை மாறுவதும்
தங்களை கொன்று கொள்ளும்
மனங்களுக்கு மட்டும்தான்
புரியும்
வலிகளைவிட
வாழ்க்கை வலிக்கும் என்று.



நிலைகள் நிர்ப்பந்தங்கள்
நிர்ணயிக்கும் உறுதியான
இறுதி முடிவு
சில முகவரிகளையும்
முத்திரைகளையும் பதிக்க
முகவுரையாக
சொல்லப்படும் பொழுதுதான்
புரிகிறது
காலம் காயப்படுத்துவதைவிட
சொற்கள் உயிர் வலியை
உற்பத்தி செய்வதன் தாக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. இரவு கொடியது

இரவுகளை

விரும்பாத கதிரவனை
கயிறு கட்டியேனும்

இழுத்து வருவேன்
நம்பி உறங்கு.

காலைக்குள்,
நீ விழிப்பதற்குள்
பகலவனை பறித்துக்

கொண்டேனும் வருவேன்.

இனி இரவுகளை
தொலைப்பதை தவிர்த்துவிடு
பகல்கள் கூட
இருளடையுமானால்
முற்றாக அழித்துவிடு

நினைவுகளை

15. பேசாமை தீது

என்
கைப்பேசி
கலகலக்கும் போது
உன் நினைவுகளோடுதான்
காதோரம்
தொடுக்கிறேன்.
என்ன செய்வது
கதைப்பதும் நீயில்லை
கதையிலும் நீயில்லை
என்றாலும்
எனக்குள் நீ பேசிக்கொண்டுதான்
இருக்கிறாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. பறிமுதல்

அன்பு
பகிரப்படுவது உண்மை.
பகிரப்பட்டவர்
பறிபோவது உண்மை.

பறிபோவது உயிர் என்பதால்
அன்பு மெல்ல மெல்ல
புதைக்கப்படுவது உண்மை
உண்மை, உண்மை என்பதால்
உயிர் பறித்தவர் மகிழ்கிறார்
உயிர் இழந்தவர் தவிப்பார்
காலம் அழகான மருந்து.

மாற்றீடுகள் முரண்பாடுகள்
வலிகள் சுமைகள்
இன்பங்கள் துன்பங்கள்
அனைத்தையும்
அழகுபடுத்துவதும் ஆற்றுவதும்
மனம்
அதை ஆமோதித்து
கரையேற்றுவது காலம்

17. நிராகரிப்பு

யாரங்கே....
இரவுகளை
இருளில் இருந்து
இழுத்துப்போடுங்கள்.
வெளிச்சத்தைக் காட்டி
வெறுப்பேற்றுங்கள்.
நினைவுகளை கனவுகளாக
காட்டுவதை
நிறுத்தும்வரை
அடைத்துப்போடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. இழப்பு



விழிகளை சிறைப்படுத்த
உறக்கம்
உள்
நுழைவதாயில்லை
மனதின்
பக்கங்களில் கீறல்கள்.

அழகாக செதுக்கப்பட்ட
இதயத்தின் உருவில்
ஏராளமான ஓட்டைகள்.

குருதியின் பாய்ச்சல்களை
சாக்கடையாக்கி
ஏமாற்றம், பிரிவு, தவிப்பு,
வலி என்ற ஈட்டிகளை
செருகிச் செருகி
கீறல்களுக்குப் பதிலாக
குத்திக் கிழிக்கும்
எண்ணத்தின் பயணம்
இமைகளை எரித்துவிட்டு
மனதின் ஆழத்தில்
மயானத்தைக் கட்டுகின்றன.
பாவம் விழிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. நானானவள்

காலங்களை
அளவிட முடியாது
காதலின் ஆழத்தில்
கண்கள் தொலைந்துபோய்
இறுகிப்போன அந்த
நினைவுகளை
இறைமீட்பதில் இன்னும்
காதலிக்கப்படுகிறாள்.

அன்பின் கட்டுப்பாட்டில்
அணைகளை கட்டி
தாயின் வரிகளை
சுமந்து காட்டியவள்.

சேயாக என்னை
செப்பனிட்டவள்.
நினைவுகளை தாலாட்டி
வைகறை வரை
வந்து போகும் நிலவே
நீ இருக்கும் வரை மட்டுமல்ல
இறப்பிலும் போற்றப்படும்
என் இனியவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. உன் எச்சம்

இரசித்து இரசித்து
எழுதிய கவிதை
சொற்பிழைகளுக்கப்பால்
பொருட்பிழையை
சூட்டிக்கொண்டது

நீ
இருந்த
நடந்த
சிரித்த
பார்த்த
எச்சங்கள் எல்லாம்
இன்னும்
தொக்கித்தான் நிற்கிறது

21. கீறல்

இதயத்தின்
அறைகளில் நீ
கீறிக் கீறிப் பார்க்கிறாய்.
உன் நினைவுகளை
.அழிப்பதற்காக

இரத்தத்தை
எண்ணத்தை
சிந்தையை...
மொத்தமாக அழித்துப்பார்.
பிணமாகத்தானும்
உன்னை
பின் தொடர்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. தாயாதல்

நீ
அன்பால் அழகு படுத்திய
என் எண்ணங்களின்
முகவுரையும்
முகவரியும் நீதான்.

என் கிறுக்கல்களில்
ஓவியமாய்
அசைந்தாடும்
அணியும் நீதான்.
இனியும் உன்னை
சுமப்பதற்காகவே
இதயத்தை
கருவறையாக்கியிருக்கிறேன்.

23. நீ நானாக

உயிரின் வடிவும் நீதான்
உளத்தின் நினைவும் நீதான்
விழியின் நோக்கும் நீதான்
மொழியின் இலக்கணம் நீதான்
வாழ்வின் தடமும் நீதான்
வைகறை விடியலும் நீதான்
நீதான் நீதான் நீதான் நீதான்
எனக்குள் இருக்கும் நீதான்
உனக்குள் இருக்கும் நான்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. இமைத்தவம்

உறக்கத்தை
தொலைத்த மனங்களுக்காக
இமைகள் விழிகளை
சாத்தாமல்
காத்திருப்பதும்
யாகமா

என்னோடு விழித்திருக்கும்
மேசை விளக்கை
அணைத்துக்கொள்ள
முடியவில்லை
உன்னைப்போலவே
தள்ளி நிற்கச்சொல்கிறது

25. வினைப்பயன்

தட்டச்சில்
பட்டெழும் என் விரல்களால்
கருத்தரித்துக்கொள்ளும்
சொற்கூட்டங்கள்
உன்னைச் சொல்லியே
பிறக்கின்றன

இரவுகளை
உறக்கத்துக்கு நெருங்கவிடாது
இரணங்களாக
மாற்றிக்கொண்டிருக்கும்
நினைவுகளை தந்தவர்களை
தேவதைகளாக ஆக்கிக்கொள்வதும்
விரோதிகளாக ஆக்கிக்கொள்வதும்
விதைத்தவர்களின்
அறுவடைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. வரம்

அன்பே...
கண்ணகி
சகுந்தலை
தமயந்தி
அமராவதி
என்றெல்லாம் நீ
இருக்கவேண்டியதில்லை
அன்பை கொடுக்க
நீயாகவேணும்
இருந்திருக்கக் கூடாதா

27. முகம்

மூடாதே விழிகளை மூடாதே - அந்த
மடலோரம் நான் மறைந்திருப்பேன்.
பேசாதே பெண்ணே பேசாதே உன்
இதழோரம் நான் ஒளிந்திருப்பேன்.
காதோரம் வந்து கதைப்பேசும் அந்தக்
காற்றோடு நான் கலந்திருப்பேன்.

மேகத்தை போர்த்த கூந்தலடி
மின்னலில் வார்த்த புன்னகையோ
கன்னத்தில் குழிகள் அழகழகோ - என்னை
கொல்லுதே கொல்லுதே என் உயிரே.
முத்துக்கள் கோர்த்த பல்லழகி
மோகத்தை வார்க்கும் இதழழகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. மின்னல்வெட்டு

கண் வழியோடி
கருவிழி குடைந்து
குத்தீட்டி குத்தி
குறுகிய இதயத்துள்
பாறாங்கல்லின்
வலுவை சுமத்திய
மின்னல் எது
சாளரம் மொய்த்து
சரசரப்புச் செய்து என்
துறவறுத்து
துகிலுரிந்து
மென்மையாய்
மோகித்த தென்றல் எது

கோடி விழிகளை
கொன்று மீண்ட போதும்
குறுகலாய் வந்து
கொலை நிகர்
கொள்ளையிட்ட
காந்தக் கண் எது

வீழ்ந்து போன என்
விழிகளை மீட்டெடுத்து
இமைகளை
இழுத்துப்போர்த்தியதால்
கணத்தில்
தொடுவானமாய்
தொலைந்துபோன அந்த
மென்முழவு எது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. நெறியாள்கை

என் வாசிப்புகளில் - அவள்
புத்தகமாய் விரிகிறாள்.
அழகான அட்டையில்
அழுத்தமான கதையவள்.

சட்டத்தின் யாப்புகளில்
அவள் சுமத்தும்
குற்றப்பத்திரிகையின்
குறியீடுகளை
என்னால் சுமக்க முடியவில்லை.

அவள் எறியும் பூக்களில்
கற்களின் தாக்கம் அதிகம் உண்டு.

நேற்றும்
நான் வாசித்த அவளில்
சாபம் இருந்தது.
என் நேரத்தின் விலையை
அவள் தீர்மானிக்கிறாள்.
நிதானமாக சிந்தித்து
மௌனமாக அவள்
பேதலிக்கிறாள்.
என் விழிகளை சுட்டெரித்து
இதயம் வரை
எட்டிப் பார்த்து
நியாயம் கேட்கிறாள்.

பெண்மையின் மென்மையிலும்
அவள்
பேயாகும் கணங்களில்
மௌனித்துவிடும் என்னில்
மனித நேயத்தை தடவுகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. தொடுவானம்

மேகத்தின் வரவே
மழையின் துளியே
மண்ணில் புதைந்தெழும்
விதையின் வீச்சே
மெல்லமாய் என்னை
உள்ளத்துள் பதுக்கிக் கொண்ட
ஓர விழி கள்ளியே
சொல்

மெய் முட்டாமல் என்
மேனிக்குள் புகுந்த
தையலே
உன் வருகையின் வாசலில்
நான் கோலமிட்ட
அன்பின் வரிகளை
அடைகாத்து வைத்து
காலத்தின் போக்கில்
களவாகிப்போன காதலை
உன்னுள் புதைத்து
கருவிழி கசிவை
கருச்சிதைவாய் அழித்து
அழும் ஆருயிரே

பொழுதுகளை புயலாக்கி
நான் புரண்டழும் பொழுதெல்லாம்
புண்ணாகி துடிக்கும்
புனிதமே

மறந்திட முடியாத
நினைவுகளின் பட்டறையில்
காதலின் வரிகளில்
காலங்களை மறந்திருந்தோம்.
வாழ்க்கியின் போக்கை
நிர்க்கதியாக்கிவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயும் நானுமாய்
களிகொண்டு இரசித்த
காலத்தை அறுத்தது யார்
காதலை கொல்வது யார்

செத்துவிட துடிக்கும்
என்னுள் நீ இருப்பதால்
சாவைக்கூட தள்ளி வைக்கிறேன்.
காதலியே
உன்னைக் கைப்பிடிக்க
காத்திருக்கும் கணவனை
கண்டு கண்டு நோகவா
கைபிடித்து வாழப்போகும்
உன்னை கையெடுத்து வாழ்த்தவா

காதலின் வலியின்
மொழியை புரிந்து கொள்ள
கடவுளுக்கும்
அருகதையில்லை

மணமாலை சூடி
மனம் இணைந்து வாழ
உணர்விருக்கும் போதே உன்னை
வாழ்த்துகிறேன்.

கண்ணே முன்னைய நாட்களை
முழுதாக நினைக்காவிட்டாலும்
கண்ணிமைப் பொழுதேனும்
நினைவெடுத்துப்பார்
காதலை பாடமாய் நீ
பாடி காட்டினாய்
முன்பே வா என் அன்பே வா என்று
முத்துச் சொற்களால்
வித்தகம் செய்தாய்

எந்தன் உயிரே எந்தன் உயிரே
கண்கள் முழுதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்தன் நினைவே என்று
கண்களைக் கோர்த்து
கவிதைப் பாடினாய்

செல்லமே என்னை எனக்கு
அறிமுகம் செய்தவள் நீ
முள்ளாய் நான் முரடனாகி
மூர்க்கமானபோதெல்லாம்
அன்னையின் அவதாரமெடுத்து
அன்பின் வடிவத்தில்
மருந்திட்ட மையலே

உன் விரல்களின்
நகங்களில் கூட நான்
தலையைக் கொடுத்து
உறவாகியிருக்கிறேன்
கோதியென்னை உறங்க வைத்த
சாதனைக்குள் சருகாகி
துவண்டிருக்கின்றேன்

பாவையே என் உயிரே
உதடுகளில் நான்
உச்சரிக்கும் வரிகளுக்கு
ஆத்திரத்தில் அடிமையாகிவிடுகிறேன்
உன்னை இழக்க முடியாத போது
வெடியாகி விம்முகிறேன்.

சத்தியமாகச் சொல்கிறேன்
நான் உன்னை காதலிக்கமட்டும்
காத்திருக்கிறேன்.
செத்துவிடும் போது
பக்கத்தில் வரவும் உனக்கு
முகமிருக்காது
தூரத்தில் இருந்து
உனக்குள்ளே அழுதுவிடு
மறுபிறவி இருந்தால்
மறுபடியும் காதலிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. உள்ளீடு

தேரடி
தேங்காயாகினும்
உள்ளீடு பொய்க்கின்
உருப்பெறாது.

சீரடி
செம்மையற்றவர்
செங்கோல் வைத்திருப்பினும்
சிறப்பிறாது.

அதி காரத்தின்
அடிவருடிகள்
செருக்கினில் திளைப்பினும்
அன்னைத் தமிழ்
வீழாது.

பெயருக்கு
வாய்ப்பெய்தும்
இலக்கு அணம்
கெட்டவர்களால்
இலக்கணம் தோற்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நியதி

மூச்சு நின்றுவிடும்
பேச்சு முடிந்துவிடும்
என்று தெரிந்தும்
வீச்சுக்கொள்கிறது ஆசை.

மாய்ந்தடித்து
மண்ணையும்
பொன்னையும் கட்டி
மனையாளையும்
மகவுகளையும் ஒட்டி
நிரந்தரமாய் வாழ்வதற்கு
ஏக்கங்களையும் பாசங்களையும்
பன்முகமாய் சூடிக்கொண்டு
பயணிக்கிறது வாழ்க்கை

3. அழகழகு

இரவுக்கு இருளழகு
இருளுக்கு நிலவழகு
நிலவுக்கு நடையழகு
நடையினுக்கு தமிழழகு
தமிழுக்கு கவியழகு
கவிதைக்கு பொருளழகு
பொருளுக்கு வினையழகு
வினையினுக்கு விடிவழகு
விடியலுக்கு பொழுதழகு
பொழுதுக்கு புலர்வழகு
புலர்வுக்கு நாளழகு
நாளுக்கு இன்றழகு
இன்றுக்கு நீ அழகு
நீ தானே அழகழகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. காலத்தின் ஓட்டம்

ஓயாத விநாடிகளின்
ஒருமித்த கடத்தலில்
இன்றை புதிதாக
சுற்றியிருக்கிறது
மணிக்கூடு.

முட்கள் குத்தி நிற்காமல்
சுற்றி வருவதால்
நிற்காமல் போகிறதோ
காலம்...

ஓ..... கால அறுவடை

சுவடுகளில்லாத
மறைப்புகளில் தினங்களை
அறுக்கிறது போலும்.

இருக்கும்வரை
இருந்து விட்டுப் போகும்
இலக்கெடுத்து அகற்றுக
இலக்காகுக

இன்றை நேற்றுக்குள்
புதைக்காது
தாய்மை கொள்க

பிரசவ அணிகளை
நிரற்படுத்த
இன்றைய முட்களை
வென்றெழுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வினைப்பயன்

தன்வினைப் பற்றி
பிறவினை தூற்றின்
குறிப்பாலணையும்
பயனேது தன் வினையால்

எச்சங்கள்
முழுமைபெறா
அதனால்
பயனிலைகளை
வடிவமைக்க நல்
எழுவாய்கள்
பிறக்கட்டும்.

பிறப்பறுக்கும்
பரப்புரைகளை
தெளிவுரைகளால்
வலிமைசெய்து
வாழும் போது மட்டும்
வினைப்பட
முற்றாக்குவோம்.
எச்சப் பெயர்கள்
இருவழியெனினும்
வினை தொடும்
எச்சங்களை
நடைமுறையாள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அணிகள்

அணி
அணிகலன்
களைந்தால்
சிறப்பணி.

நகைகள்
களைந்தழகு
நகை அணிந்தால்
உவகை
உளத்துள்ளும்
பூக்கும்.

பொருள் அணி
வேண்டின்
பொருளணி கெடும்

தமிழினி சிறக்க
அணிகளை சூடி
அகங்கள் மகழ
அகத்தணி பூட்டி
புற அணி கலன்
விடுத்து
இயலோடு இயைபாகின்
இருக்குங் காலம்
இன்புற்ற அணிகள்
அலங்கரிக்கும்
இந்த இலக்கணம்
தலைக்கனம் போக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. படிகள்

படி
கற்படி போல்
கல்

கல்
கல்லாய் என்பதல்ல நீ
கல்

கற்றல் ஆற்றல்
அல்லல் அல்ல.

நாற்படி நாலும்படி
நூற்படி நுணுகிப் படி
நெறிப்படி நேர்ப்படி
சொற்படி உனைப்படி
உருப்படி உள்ளபடி
உளம்படி

வரும்படி வரப்படி
வருங்காலடி உன்னடி
அடிப்படை
அடி படை
அடி நீ அதனால்
கல்
அல்ல கல்லாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. இதுவும் கடந்துபோம்

நேற்றை நான்
நிராகரிக்கவில்லை.
அது வந்து போன தடயத்தை
கண்டு கொள்ளவும் இல்லை.

இயந்திரகதியில்
இயங்கிப்போன என் தங்கிப்போதலில்
தடையின்றிப்போன நேற்றில் -என்
இருப்பு நிச்சயமற்றதை
நேர்முகமாக பறைசாற்றியது.

ஒரு நாள் .....
அறுவடையான ஒருநாள்

வலி கோபம் இழப்பு
ஏக்கம் காதல் கண்ணீர்....
பிரிவு துன்பம்.......

முடியவில்லை என்பதையும்
இயலாது என்பதையும்
ஒரு நாள் கடத்தல் ஒரு நாள் பிறப்பு
தேற்றலாய் மாற்றமாய்.....
மருந்தாகிக் கடத்தி ஞானத்தை விதைக்க
காலம் மருத்துவம் செய்கிறது.

இன்றும்
மாற்றத்தின் மடியை
பஞ்சணையாக்கித்தர
விடியல் கொண்டு வருகிறது.
இன்னுமொரு நாள்.

ஆகவே
எதுவும் கடந்துபோம்
இதுவும் கடந்துபோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. படிகற்கள் படிகள்



படி
படிப்படி
உனைப்படி
எனைப்படி.

அகம்படி முகம்படி
பொருள்படி அதன்
பொருட்டுப்படி

அறப்படி அறம்படி
திறம் அடி எனப் படி
கடிமனம் கடக்கப்படி
முடியடி தெளியப்படி
நெறிப்படி வாழப்படி உன்
அடிப்படை அளந்து பிடி.

மண் மடி நினைத்தடி
உன் அடி ஆழப்படி
சுவடடி அடித்தளம் அதை
பிடி பிடி
இறுகப்பிடி

முகமூடி
உலகோடி அடிகெட்ட
அடிவருடிகளை
வெடியாகி வெடித்தெழ
விடிகின்ற பொழுதெல்லாம்
அடியாகி அணியாகு.

அதற்காக அடி படி
அடிப்படை அறிந்து படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. இலக்கின் அணம்

அமிழ்தே என்
தமிழே
இலக்கின் இயத்தால்
இலக்கின் அணம்
தெளிந்து

கண்ணிமை நொடியில்
மாத்திரை கட்டி
குறிலாகி நெடிலாகி
உயிர் ஆயுதம் எனவாகி
மெய்யாகி பொருள் சூடி
முப்பதுவெழுத்தை
முதலாக்கி எம்
முகமாகி என்
முகவரி காட்டும்
முத்தமிழே.

மெய்பிரித்து
இனமாகி
வலிமையுடன் மென்மை
இடையினமாய
இறுகப்பிணைத்து
அருகிருந்தென்னை
ஆண்டேகும் அழகே

நெடுங்கணக்குடுத்தி என்
நிறையடி நெகிழ
மனத்திடை பதிந்தொரு
மாந்தமொழி அறிய
காந்தலென கண்ணுள்
காட்சியொளிவீசும்
இனிக்கும் மொழியே என்
இதயத்துடிப்பே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. மனதோடு

நினைவுகளின் அலங்காரங்கள்
உணர்வுகளின் உற்பத்திகள்.
மனங்களின் மன்றத்தினால்
புறக்கணிப்புச் செய்கையில்
அகங்களை முகங்கள்
நிரற்படுத்துவது
வெளிப்படையான மோசடி.

ஏக்கங்களை ஏக்கத்
தாக்கங்களை
ஏனங்களின்
தொகுப்புரைகள்
தணிக்கை செய்யாத
தளங்களில்
மனப்போர் வெந்தரிவது
தோல்வியென்றால்
அலங்காரங்களை
சாகடிப்பது
முறையில்லை

தொட்டுவிடு தூரத்தில்
சுட்டு விரல் இருந்தும்
கட்டுரை கொள்ளும்
பிடிமனதால்
கெட்டுவிடாத கற்பனையில்
தொட்டு விடும் மன
அரணை கட்டல்
அல்லல் அல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. அழகு

நிறத்தில்
தோய்ந்தலையும்
உடலோ

விழி சூடி
மகிழ்ந்திளைக்கும்
மை பூச்சோ

மேனியை ஆறத்தழுவி
ஆடையாய் அலங்கரித்தாளும்
வண்ண வடிவமைப்போ

காதாடும் தோடு துணை
கிண்கிணிகளோ

ஒய்யாரத்தில் பையவரும்
நடையிடை நெளியும்
மெருகாமோ... அழகு

அழகாளும் அழகு அதுவல்ல

அகத்திடை சூடிய
முரணறியா நல்
அன்புரு அழகழகு

வன்மத்தகற்றி
வலிமையான
நெஞ்சுடன்
பொய்களைந்து
புன்முறுவல் பொழில்தல்
அழகழகு அதை
அகத்திலும் முகத்திலும்
அணிந்துலாவல்
அழகழகே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. இதுவும் ஒரு புகல்

நினைவுகளின்
ஆழக்குழிக்குள்
தடுப்புச்சுவர்களற்ற
எண்ணக்குவியல்களும்
வண்ண
வடிவமைப்புகளும்
கள்ளத்தனங்களும்
ஒத்திகையின்றி
அரங்காடிக் கொண்டிருக்கின்றன.

கட்டுகளற்ற
கடும் சுவர்களற்ற
தனிக்கைகளற்ற
சுயங்களின்
பிரதிகளை
சித்திரக்கலைக்கொண்டு
செதுக்கி வைத்திருக்கிறேன்.

உறவே
உன்னையும் அங்கே
பரப்புரையின்றி
சிறப்புச் செதுக்கலில்
விதைத்துவிட்டிருக்கிறேன்.

முளைவிட்ட உன்
அன்புப் படர்வில்
தலைகோதி தாலாட்ட
விலையில்லா உயிர் மூச்சுள்
ஓர் ஒப்பந்தம் செய்து கொள்.
நீ நான்
ஓர் உறவாய்
இன்றையும் நாளை வரை
எடுத்துச் செல்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. காதல் நெறி

விழி பட்டுத்தெறித்து
மனச்செல்களில்
இனம்புரியா கலப்புகளை
கோப்புகளாக்கி
நினைவுக்களிப்பை செருகி
நிதம் நிதம் வாசிக்கத்தூண்டும்
கிறுக்குத்தனம்
காதலின் கதவு திறப்பு.

அடித்தளமிட்டு ஆரவாரித்தெழும்
மன முகவரிகள் கற்பனைகளை
கயிறு கட்டி இழுத்துச்செல்லும்
காந்தவியக்கத்தின் காதல் நெறி.

அன்பு அறப்படி ஏறுகையில்
அகம் ஏற்றி வைக்கும்
ஒளிச்சுடரை விழி நிறைத்து
காதல் நிகழ்த்தும் வாழ்க்கை வசந்தம்.

புலன்கள் பறிக்கப்பட்டு
புகுமுக விழிவீச்சாள
அகம் கொடுத்து
முகம் சிவந்து இன்னும்
காதல் தவம் இருக்கும் கண்களே

காதல் பெருகின்
வாழ்தல் சிறக்கும்
துணை இணை மனை
தொட்டேகி அசைந்தேகும்
அனைத்தையும் நினை
நீதான் காதலின் கரு
காதலின் பொருள் ஆகவே
காதல் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. உயிரான மொழியாள்

உயிருடன் மெய்யணைத்து
ஆயுதம் அழகுடுத்தி
கண்ணிமைக்கும் காந்தவிதி
மாத்திரையால்
குறில் கூவி நெடில் தாவ
அணிகுவித்து ஆகுபெயர் அளவளாவி
பகு புகா பகா பொருள்
வகை தொகை தொகாப்
பயன் திணை நெறி
உனை எனை அதை அளந்துகல
சுவடறியா அணங்கிவள்
நான் வணங்கிட சுரப்பவளோ..

நிலைகண்டு
வரும் மொழியாள் புணர்கொள்ள
பூத்தவிழும் புதுச்சொல்
வேற்று மையுள் கருவுரு பொருள் கவ்வி
எழுவாயென எமை
தொழ திரு மொழியென வளர்தவளோ.

வினைப்பட
உனை எனை குறிப்புடன்
தெரிநிலை கண்டுயர் எச்சத்தாழ் திற
இச்சை கொள்ளவொரு
பச்சைத்தமிழ் என உச்சுமுதல் உயிர்
மூச்செழுத உச்சுமோர்ந்த என் உளத்தாளோ

என் கணக்கு உன் எண்கணக்கு எடுத்தாலும்
இன்பத்தாய்மொழியே என்னாளும்
தாய்மொழித்திருநாள் ஆகட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. எதையும் தாங்கும் மண்

உள்ளத்தறநெறி
பிறழ்ந்து உமிழ்
வாய்வழிக் காரி
தூவென துப்பினும்

கொட்டும் பொருளறி
அறநெறி மெய்ப்பட

விதையெனின் துளிராய்
சிதைபொருளெனின்
உரமாய் வரைமுறை
வளர்த்தூட்டும் நிலமதன்
நெறியகழ் விளக்கு

உன்
கொடுமுறை ஏற்று
கெடு நிலை தாங்கி
வடுவாகி வையா
நிலத்துடை அறமே

பொறுமை எனும்
அருமைப் பொருள்
பெருமை கொண்டாள
மண்ணின் மரபுயர்
பொறுமை கண்டுய்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. செருக்கப்பா

பா
ஒரு பா.

அப்பா
கருப்பா பொருட்பா
அறப்பா
எப்பா அப்பா

இல்லை
பொறப்பா.
அது வெறும்
சொற்பா.

புதுப்பா எழுத
முனைப்பா எடுத்த
குறைப் பா

தப்பப்பா தப்பா
சிரிப்பா
செதுக்கிய
புதுப்பா.

அது
திருப்பா என்றும்
அறப்பா என்றும்
பொறுப்பா செப்பின்
கெடுமப்பா
பா ஆடை கெட்டு
பாடையேறுமப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. கள்ள மாங்காய்

கறுப்பிழந்த கரும்பலகையில்
வெண்கட்டி
வியர்த்தெழுதும்
சொற்கூட்ட கட்டவிழ்த்து
புரியாத புதிரதை ஏட்டுப்
புத்தகத்தில்
எடுத்தெழுதி
உடல் ஒட்டி
உட்காந்திருந்தும்
புலனள்ளி
வெளியோடி
புன்னகைத் தூவி
புவியாளும் நேரம்.

மன்னரும் நானே
மந்திரியும் நானேயென்று
சீர் சொல்லித் தந்தாலும்
சிரசெடுக்க மறுத்த
சிறு வயதுப்
பெரும் பருவம் அது.



ஊர் ஒன்றி
உதைத்தாலும்
காற்றறுத்து மாங்காய்
காம்பறுத்து வீழ்த்தி
சுற்றி முற்றும் பார்த்து
சுதந்திரமாய் பற்றி
முத்திக்கீடாகா
முழுநிறை கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்திக் குத்தி பிய்த்து
கொடையினனாகி
நீட்டிய கைகளில்
யுகபொருளாய்
துண்டு மாங்காய்
கொடுத்து
பதிவிரதை
பொதியிருந்த
உப்பை
நாவிற்பொடி தேய்த்து
நறுக்கிக் கடித்த
மாங்காய் உடன்
நன்னெறி கலக்கையில்

தடியெடுத்தாண்டு
மாங்காய்
குடியழித்த கோமான்
விழிப்பிதுக்கி வெறித்து
சுளீரென அடிக்கையில்
என் மடி விலகிப்போன
மாங்காயே உனை
மறக்கேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. பச்சை விறகும்

பச்சை விறகு
புகைத்த
அடுப்பும் வயிறும்

உருட்டித்தள்ளி
ஊதுகுழலுக்குள்
பாதி உயிர்வரை
பற்றித்திணிக்கும்
வெற்றுக் காற்றின்
வேகப்பாய்ச்சல்

பற்றிக் கொள்ள
மறுத்து - புகை
கக்கிக் கடத்தும்
நச்சுக்காற்றுள் விழி
விக்கியழுது
தொண்டைக் குழியதை
தொட்டுத் தாவிய
வஞ்சப் புகையோடு
வந்த இருமலை
வாய் வலித்துத் தள்ள
காய்ந்த வயிறு மீண்டும்
செத்து மீள

உலை கொட்டிய
அரிசியும் - கிழிந்த
சேலை கட்டிய
அரசியும்
பற்றற்று விட்டதில்லை

அடுப்பின் நெரிசலில்
வெந்தவர்கள்
நொந்ததில்லை.
அடுப்பேறிய உலையோடு
அன்பள்ளிக் கலந்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. தமிழாள்

தேனே – என்

உயிர் பற்றி உரசி
மெய்யுள்
மையம் கொண்டாளும்
பேரழகே

கொள்ளையிட்டுன்
குணமள்ளி
ஆழப்புகுந்துன்
அடையாளம் பருகி
வாழ்தலில் உன்
வரலாறு முகர்ந்து
அள்ளி
அணைத்துன்னை
அகத்துள் அழுத்தி
இருப்பில் உன்
கருப்பொருளாகி
இன்றும் என்றும் உனை
இறுக்கத்தான் ஆசை

சொல்லழகே
வரியெழிலே
கருத்தாகி என்னை
கடத்தும் விசையே

என்றும் என்னை
எடுத்தாளும் ஏகத்தழகே
சொல்லள்ளித் தந்து
சுவைகாட்டும் – என்
உயரின்பத்தமிழே
வாழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. பொருட்பிழை

பெட்டைக்கோழிக்கு
பெரும்பலம் காட்டி
கொக்ககரக்கோ என்று
செட்டை அடித்து
பகட்டாய் பாடிக்காட்டிய
சேவலின் சிறப்பை
அரிந்துகொண்டிருந்த
கத்தி
இரத்தம் சிந்தியது.
சேவலும் முட்டைக்
கொடுத்திருக்கலாம்.

22. கொம்புத்தேன்

கொம்புக்குத் தேனா
தேனுக்குக் கொம்பா
இல்லை
மனிதக்கொம்பா....

பூவளந்து தேனை
கொடுத்தனுப்ப
மரம் கொம்பை
உவந்தளிக்க
தேன் பொசித்து
செவ்விசை தானோதி
தேன்வதைக்குள் தம்
தேருலா கண்ட
சிறுகூட்டை
அடித்தழித்து
வதை கடித்து தேனி
வாழ்வழித்து உருசிக்கிறது
மனிதக் கொம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. இமைத்தவம்

மேலிமை
கீழிமை தொட்டு
மையல் கொள்ளும்
அமைவை
விழி
வீசியெறிந்து
ஒளி பற்றிச்சூடும்
பார்வை போக்கில்
கிழித்தெறியப்படுகிறது
இமைக் காதல்

இரவுவரை
நொடிகளில்
முட்டி
உரசிச்செல்லும்
இமைத்தவம்
விழிகாப்பு அரண் என்பதை
கண்மணி
கண்டுகொள்வதில்லை.

24. நல்லிலக்கணம்

தென்றலுக்கு வேலி கட்டி
மழைக்கு தடை போட்டு
கதிரவனை பிய்த்தெடுத்து
வானத்தை அழித்து
இருளாக்கச் சொல்கிறது - உன்
சமன்பாடு - அது
சுயநலத்தின் அடிக்கோடு
அடி இழந்த இலக்கணத்தில்
வழுக்கள் இருக்கலாம்.
ஆனால்
இலக்கணம் வழுவாகாது.
என்பது
நல்லிலக்கணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. நல்ல நேரம்

நல்ல நேரம்
நற்பொழுது
மேற்கோள்கள்
பொன் மொழிகள்
ஞாபகங்கள்
அனைத்தும்
கிழித்தெறியப்படுகிறது
நாளும்
நாட்காட்டிகளில்

காயங்கள்
வலிகள்
கோபங்கள்
எதிர்பார்ப்புகள்
ஏக்கங்கள் கூட
காலத்தால்
கிழிக்கப்பட்டு
புது நாளாக
புணரமைக்கிறது
வாழ்வை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. பயணம்

விரைவுகளில்
வேகங்களில்
வினைப்படும்
விளைவுகளை
தேடும்
பயணம்.

போதும் என்ற
தடைகளை
தகர்த்தெறிந்து
பொறாமைகளின்
முன்மொழிவுகளால்
புலன்களின் நெறிகளை
உடைத்தெறிந்து
போகும் பாதைகள்
பொழில்களாக
ஒளிர்ந்தும்....

ஆசைச் சாக்கடையை
அள்ளிக்கொண்டு
அதிகரிக்கிறது
வேகப்பயணம்.

எண்ணவேகத்தை
எட்டித்தொட
இன்றும்
ஒரு பயண நாளாகி
வேகமெடுக்கிறது
எங்கள் பயணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. நாவின்பம்

சுவைப்பொருள்
அசைபோட
அரைபடும்
அருஞ்சுவையோ
அமுதமோ,
அடிக்கரும்பை
கடித்துண்ணும்போது
கவர்ந்தினிக்கும்
பெருஞ்சுவையோ
நாவின்பம் இல்லை.

நாவினித்தபின்
குடலோடி
குதம்வரை கழிதலில்
நாச்சுவை
நலிந்திடும்.

அருஞ்சொல் கூட்டி
மென் சொல் புகுத்தி
வன்சொல் விடுத்து
நின் மனம் இனிக்க
நன்னெறி ஒட்டி
நாவிசைத்தலே
நாவின்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. ஒன்றில் ஒன்று

வரவேற்புகளுக்காக
கதிரவன்
காலிப்பதில்லை
கடமைக்காக காலை
விடிவதில்லை.
கடனுக்காக தாய்
தாயாவதில்லை
காற்றுக்காக உயிர்
காத்திருப்பதில்லை
நாளைக்காக
இன்று
நடைமாறுவதில்லை

ஒன்றின்றி ஒன்று
முற்றாவதில்லை
முற்றுற்ற யாதும்
முழுதானதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. பிடிச்சாம்பல்

ஒரு பிடி
சாம்பல்
பொடி

சாம் (சாகும்)
பல்லுயிரும்
பிடிச்சாம்பல்
பொடியாகும்
காணீர்

மடி படு மயக்கம்
மாடி வீடு கிறக்கம்
துடித்தோடும் தூரம்
தொலைந்தோடும்
காலம்
கடிபடு மனம்
களித்தினிக்கும்
சுகம் அனைத்தும்
அணி இழந்து போம்
ஆகவே

போதல் போதல்
என்பது நம்
கால இழுவையின்
கடத்தல்.

சாதல் வரை
தாய்மைக்
காதலோடு
போதலே
பொடிச்சாம்பல்
பிடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. அம்மா

இயங்கு நிலை
இயக்கு நிலை
இவ்வாழ்வின்
இருப்பு நிலை
அனைத்திற்கும்
இருக்கும் இறைவி
இதயத்தின்
இயங்கலுக்கு
முகவரி எழுதிய
முழுமை

அம்மா
அனைத்துமான
உலகின்
ஒப்புமையற்ற
உயிர்ப்பொருளின்
உருவாக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. செதுக்கல்



விழி
வழிகாண
விழி
வலியின்
பிழிவில்
கழியும்
பழிகள்.

உளியது
பொழிய
கழிவது அகல
மொழிவது
எழிலென
களிகொண்டாள
விழி விழி நல்
வழியென
விழி.

32. பயங்கரவாதி

துப்பாக்கிகள் தோட்டாக்களை
நிராகரித்துவிட்டாலும்
கொன்றுவிட குறிப்பார்க்கிறது
உலக ஒப்புதல்கள்.
பொருள் - கொலை
தகுதி - மனிதனாக இருக்க வேண்டும்
வயது - வேறுபாடு கிடையாது
இடம் - ஏதுமற்றவர் வாழிடம்

காரித்துப்பிவிட்டான்
குழந்தை பிணங்களுக்குப்
புரியவாப் போகிறது
அடுத்து இன்னுமொரு குழந்தை
குண்டு வீசினானாம்
வல்லரசுகள் வரிசைகட்டி ஓடுகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. கழிவுளம்

உண்டது உற்று
உடையது பெற்று
அற்றது போக்கும்
அழகியல் உடலில்
கற்றது பெற்றும்
காண்பதறிந்தும்
கழிவினை சுமக்கும்
மனத்தினை அறுக்க
கழிகுழி உண்டோ
கடத்திட வழி உளவோ

34. மாதவிடாய்!

ஒதுக்கப்பட்டு ஓரத்தில் கிடந்தவள்
இப்பொழுது மாதமும் தெரியாது
ஒதுக்கமும் தெரியாது
முடங்கிக் கிடக்கிறாள்
முள்வேலிக்குள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. பெற்றதன் பேறு



அன்பின் வடிவே
அன்னையின் சாயலே
என்னை சில்லிட வைக்கும்
சின்னக்கைகளின்
சிங்காரியே.

என் முதல் கவிதை நீ.

சொற்களை தேர்ந்தெடுத்து
சுந்தரத்தமிழில் சுவை கலந்து
செப்பனிட்ட வரிகளையே
செதுக்கி சித்திரமாக்கி
அற்புதமாக அழகுடுத்தி
பிரசவித்துவிட்ட என்னை

முத்தங்களால் தாலாட்டி
மூர்க்கமாய் உதைத்து மிதித்து
மூடிய கண்களை திறந்து
பார்த்து - என்னில்
சித்திரம் கீறி விளையாடிய
என் சின்னக் கவியே

பெற்றவளாய் பேரன்பு காட்டி - நீ
குமரியானதும் என்னை
குழந்தையாக்கி குறைபோக்கி
குற்றம் களைந்து
விற்பம் பகர்ந்து நிற்கும்
பெருங்கவியே
என் முதல் கவியே

கவியெழுத கருவான உன்னால்
கன்னித்தமிழும் இனிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. சுடலை ஞானம்

மயானங்கள்
மறுபரிசீலனை
செய்யப்படவேண்டும்.

வண்ண வண்ண
கள்ளக்கனவுகளில்
அறுவடை செய்யாமல்
புதைத்து வைத்த ஏக்கங்களை
கடப்பாறைக்கொண்டு
வெட்டி எடுத்து...

புதைந்தவர்களின்
கனவுகள்
புதுப்பிக்கப்பட்டு
இயந்திரமாய் இலக்குகளை
தொலைத்து
மாண்டுபோன அவர்களின்
மண்டையில்
மென்மையாக...

வாழ்க்கை ஒருமுறை
நிறைவை மட்டுமே தேக்கிக்கொள்
குறைகளை கொன்றுவிட்டு
மகிழ்ச்சிகளை சூடிக்கொள்
துரோகத்தை துரத்திவிட்டு
காதலை மோகித்து
கண்மூடி செத்துவிடு என்று
ஓதவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. தேவைப் பலன்

வாயுள் புகுத்திய
வேதியல்
விருப்புப் பொருள்
(Chewing gum)
முப்பத்தியிரண்டு
வல்லாதிக்க
வெள்ளையரின்
வேட்டையில்

கட்டுண்டு கடியுண்டு
நாவழுத்த நறுக்கி -தன்
சுவையிழந்தும்
வெறுவாய் அரைக்க
புக்கிடமின்றி - உள் புகலின்றி
வெளி வர வழியின்றி
கொடுவாயுள்
குமைந்தழுந்தி
பொல்லாப் பல்லுள்
புலன்கெட்டு சுழன்றபின்

நாவின் நற்பணி முடிய
உருட்டி திரட்டி வாய்பிளக்க
பல் திறக்க நாத்தள்ளி துப்ப
வீதியில் விழுந்த வேதிப்பொருள்
செருப்பில் ஒட்டி அதைப் பற்றி
உறவால் உடன் செல்ல
அதை தட்டி தேய்த்து வெட்டி
வேண்டாப்பொருளாய்
வீசியதில்
கற்றுக் கொடுத்தது
வாழ்க்கையை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. சீதைகள் தேடும் இராமன்

இராமன்களைத் தேடி
பல விற்களை
ஒடித்து
மாலைகள் தாங்கி
சிரித்த முகம் பூசி
சிங்காரித்துவரும்
சில ஊர்வசி இரம்பைகள்
தோற்றுப் போன தம்
சீதையின் வழியை
ஒப்பந்த முறையில்
நிராகரித்து
இராமன்களை
தேடிக்கொள்ள
தீயை வெறுக்கின்றனர்.

பல சீதைகள்
தீ மிதித்தும்
நோக்குதல் வரமின்றி
கன்னி முதிர்வில்
இளமை சுமக்கின்றனர்

இராமன்கள்
இங்கே
வில்
உடைக்கத்தேவையில்லை.
என்ற
முன்னுரை
வாசிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.
ஆயினும்
இராமன்களைக் காணோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. இருட்டடிபட்ட நுளம்பு

குடம் குடமாய்
குருதி குதித்தோட
இரவுக்குள் உடல் மோகித்துறங்க
மகுடிபோல் மனதுக்கொவ்வா
இசைவீசி இருட்டினுள்
நல்ல இடந்தேடி
கூர்முனையினை குறிப்பாக
நிலைப்படுத்தி
குத்திக் கொஞ்சக் குருதி குடிக்க புக

மாயவிழி திறக்காமல்
கும்மிருட்டில் குறிபார்த்து
அதிவேக கையனுப்பி
அடித்தென் ஆவி போக வைத்தவரே

என் குருதியோடு
கொலைபுரிந்த உம்மில்
மொத்தமாய் செத்து
பித்தாகி ஒட்டியிருக்கும்
என்னை
எடுத்தெறிந்து ஏளனம் செய்து
மீண்டும் மகிழ்ந்துறங்க மனம்
எப்படி வந்தது உமக்கு

கொஞ்சக் குருதிக்
கொடுத்திருந்தால்
பஞ்சமா வந்திருக்கும்
கொலைக்கார குணவானே
ஓங்கி அடித்தென்
உயிர் பறித்த வீரனே

ஒரு நுளம்பின் சரித்திரத்தை
சிதைத்தப் பெருமை
உமக்காகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. சோமாளியா

பசிப்பது
தடையில் உள்ளதால்
எலும்புகள் சுமக்கும்
தோல்களில்
தசைகளின் வறுமை.

அங்கே
குடிக்க கடிக்க தின்ன
வறண்ட மண்ணும்
பூக்க மறுக்கிறது.

வானம் மழைத் தடை
செய்திருப்பதும்
கொடுமை.

பசி பசி பசி
ஆயினும்
கனரக துப்பாக்கிகள்
கைக்குண்டுப் பொதிகள்
உண்டு களிக்கிறது
ஒவ்வொரு உயிரையும்.

சாகாவரம் பெற்ற
இயந்திர இதய
பதவிப் பணியாளர்கள்
சுவைத்து நக்க
குருதியுள்ள மனிதம் தேடி
குறி பார்த்து சுடப்படுவோரில்
சருகாகிச் சாகும்
யாரிடமும் பசியைத் தவிர
வேறொன்றுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. பா வாடை பட்டு...

பூ வாடையில்
ஒரு பாவாடை

பாவாடைப் பட்டு

பாவாடைப்பட்டு
பளபளக்க
பாவாடையில் இடை பறித்து
வா விட்டு என்றால்
பாடை கட்டு என்பது
முறையா

பூ வாடை போர்த்திய
பூ கள் சிந்த
வாடைக் காற்றில்
வண்டு கள் உண்டு
பாவாடையில்
மயங்கி
இடை கெட்டு நிற்பது
அழகல்ல.
அதனால்
பாவாடையை
இடையில் கட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரன்பிற்கினிய வாசிப்பாளர்களே...
உங்கள் கரங்களில் அடைக்கலமாய் அடங்கியிருக்கும் இந்த சொற்காட்டின் உள்ளே ஏகாந்தமாய் நீங்கள் உலவலாம். என் எண்ணங்களின் மொழிகளை இங்கே விதைத்திருக்கின்றேன். காலையை அலங்கரித்து விடியல்களை தொகுத்து எங்கள் நடைமுறைகளை நகர்த்தும் இயலின் தொடுகைகளை தந்து இருக்கின்றேன்.

இந்தச் சொற்காட்டில் கொட்டிக்கிடக்கும் சொற்கள் குமுக வலைகளின் தளங்கள் தொட்டவை. பல நண்பர்கள் இலகுதமிழில் அல்லது எளிய நடையை கையாளுங்கள் என்று அன்பால் கடிந்தும் கவிதைக்களத்தின் காத்திரம் என்னை கட்டிப்போட்ட நிலையில் சொற் பதங்களின் சூழ்ச்சிகள் மிகைகொண்டதாக கூறுகின்றார்கள். நீங்கள் நலிவை காட்டுங்கள் நாளை திருத்தப்படும்.

சொற்காடு கவிதை நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org